தென்றல்

ஆசிரியர் கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-6.

மலர் 4 | சென்னை | 30-11-57 | சனிக்கிழமை | இதழ் 22

டாக்சி டிரைவர் சொன்னது

எத்தனையோ லட்சக்கணக்கான பேர் சென்னையில் வாழுகிறார்கள். நகரம் விரிந்துகொண்டே போகிறது. இவ்வளவு பெரிய பட்டணத்தில் எத்தனை பேருடைய தினசரி நடவடிக்கைகள் மனிதனின் சிந்தனையைக் கிளறக்கூடியவைகளாக இருக்கின்றன? நாள்தோறும் பார்க்கிறோம்; பேசுகிறோம்; பழகுகிறோம்; பயன்படுத்திக்கொள்கிறோம். பெரும்பாலும் நாம் அவர்களைப் பற்றி எண்ணிப் பார்ப்பதில்லை. அவர்கள், அவர்கள் பார்க்கும் தொழிலைப் பற்றி என்ன நினைக்கிறார்கள் என்பது நமக்குப் புரிவதில்லை.

எழுத்தாளனுக்கு எழுதுவது தானே தொழில் என்று மிக எளிதாகச் சொல்லிவிடுகிறோம். அவனுக்கும் எத்தனையோ தொல்லைகள்; கவலைகள். சில நேரங்களில் பேனாவையே அவன் ஒடித்துத் தூர எறிந்துவிடுகிறான். பேனா என்ன செய்யும்? எண்ணங்கள் ஒரு முனைக்கு வருவதில்லை; வண்ணங்கூட்ட வார்த்தைகள் விழுவதில்லை. எழுகின்ற செம்பரிதி உலகத்தைத் தழுவி கூடுசேரும் வரை, இடையிலே வளர்கின்ற வாழ்க்கைப் பிரச்சினைகளை ஒட்டியதுதான் அவனது எழுத்தோவியம். இது யாருக்குத் தெரிகிறது? படிப்பவர்களுக்குப் புரியாது. எழுத்தைத் தொழிலாகக் கொண்டிருப்பவனுக்கு இருக்கிற மன உலச்சலை, எழுத்தாளர்கள் எல்லோராலும்கூடக் கண்டுபிடிக்க முடிந்து விடுவதில்லை. அவர்களில் ஒரு சிலருக்குத்தான் புரிகிறது. அவர்களும் எழுத்தை நம்பியிருக்கிறவர்களாக—எழுதித் தான் தீரவேண்டிய நிலையில் இருப்பவர்களாக இருக்கவேண்டும்!

எழுத்தாளர்களைப்போல் இன்னும் எத்தனையோ வகையான தொழில் புரிவோர் தங்கள் துயரத்தை கவனிக்க முடியாதவர்களாக இருக்கிறார்கள். அந்தப் பரிதாபத்திற்குரியவர்களின் பட்டியலில் 'டாக்சி' ஓட்டிகளும் இடம் பெறுகிறார்கள். மிகவும் வருந்தத்தக்கது.

நகரில் நடைபெறும் கொலை, கொள்ளை, வழிப்பறி வழக்குகளில் பெரும்பாலும் டாக்சிக்காரர்கள் சம்பந்தப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. பத்திரிகைகளில் செய்திகள் வருகின்றன. அவர்களில் எத்தனைபேர் அந்தக் காரியங்களில் எண்ணித் துணிந்து ஈடுபட்டவர்கள்? எத்தனை பேர் சேரவேண்டிய சூழ்நிலைக்கு இழுத்து வரப்பட்டவர்கள்? எத்தனைபேர் வழக்கில் கட்டாயமாக வழக்கில் இணைக்கப்படுகிறார்கள்? - இந்த உண்மைகளைத் தெரிந்துகொள்ள வேண்டுமானால் கைக்கு அகப்படுகிற ஒழுக்கமான டாக்சிக்காரர்களின் மூலமாகத்தான் அறிந்துகொள்ளமுடியும். அந்தத் தோழர் சென்னையின் 'சுயரூப'த்தைப் புரிந்துகொள்ளாதவராக இருந்தால் அவர் சொல்வதை நூற்றுக்குநூறு நம்பலாம். பழையவர்கள் பழகிவிடுகிறார்கள். உள்ளத்திலிருந்து உண்மை கிளம்புகையில் தன் குற்றம் தொண்டைக்குப் பக்கத்தில் கல்லணை கட்டிவிடுகிறது.

போலீஸ்காரர்கள் எரிந்து விழுகிறார்கள், ரிக்ஷாக்காரர்கள் பேசிய கூலியைக் கொடுக்கும்போது 'வாழிய பாரதம்' என்று நாட்டை வாழ்த்தி, கொடுக்கும் கையை ஆயிரம் தடவை அலக்கழித்து மனதைக் கெடுத்துப் போகிறார்கள் என்று சென்னை முழுதும் பேசிக்கொள்ளப்படுகிறது; ஏன், சென்னைக்கு வந்து போகும் வெளியூர்காரர்கள்கூட ஊருக்குப் போனதும் இதைத்தான் ஒருநாள் கச்சேரியாகவே நடத்துகிறார்கள். இவர்களைப் போலவேதான் டாக்சிக்காரர்களும்! பிரயாணிகளை ஏற்றும்போது காட்டும் பரிவை அவர்களை இறக்கும்போது காட்டுவதில்லை. இதற்கு என்ன காரணம் என்று கேட்டால், 'கடிகாரத்தை நம்பிக்கொண்டிருப்போர் எல்லோரும் அப்படித்தான் பேசுவார்கள். நேரம் போனால் கிடைக்குமா?" என்று அவர்கள் மனோதத்துவம் பேசுகிறார்கள். அதில் ஓரளவு உண்மையும் இருக்கலாம். அதுதான் முடிவான விளக்கமா? இன்னும் ஆராய்ந்து பார்க்கவேண்டும்.

"டாக்சிகாரங்க அக்ரமம் பண்றாங்கன்னு நீ சொல்றே! நாங்க படுற கஷ்டம் உனக்கென்ன தெரியும்?" - என்று கிளைவ் காலத்து பாணியில் கேட்கிறார் ஒரு டாக்சிக்காரர்.

"உங்களுக்கென்ன கஷ்டம்? உங்களிடம்தான் கடன் வியாபாரம் இல்லையே!"

"ஐயே, அதுக்கா நான் சொல்றேன். சவாரியிலே போய்க் கொண்டிருக்கும்போது எங்க மனசு என்ன இங்கேயா இருக்குது? எத்தனையோ நினைவுகள்! நேத்திக்கு இப்படியாச்சே, முந்தாநாளைக்கி அப்படியாச்சே- இப்படித்தானே எங்க மனசு போவுது!"-என்று அவர் கதை சொல்ல ஆரம்பித்தார். நானும் கேட்டுக்கொள்ளத் தயாராவதைப்போல் நிமிர்ந்து உட்கார்ந்தேன்.

"வீட்டைவிட்டு அதிகாலையில் கிளம்புகிறேன். சென்னையை மூன்று முறை வலம் வருகிறேன். கிடைத்ததைக் கொண்டு நானும் என் மனைவி மக்களும் வயிற்றைக் கழுவிக்கொள்கிறோம். எத்தனையோ வகையான உள்ளத்தினர் என் காரில் 'சவாரி' செய்கிறார்கள். அவர்களில் 'தர்மப் பிரபு'க்களும் இருக்கிறார்கள். மீட்டர் காட்டும் தொகைக்கு மேல் கொஞ்சம் கூட்டிக் கொடுப்பார்கள். அதுதான் எனக்குச் சொந்த வருமானம்—தனி வருமானம்!

— 9-ம் பக்கம் —

ஊசிநூல்

எனக்கும் நண்பன் ஜனவுக்கும் தர்க்கம். இது ஒன்றும் புதிதல்ல; எப்பொழுதுமே சந்தித்து விட்டால் ஏதாவதொரு பிரச்னை முளைவிடும். பொழுது போக வேண்டுமென்பதற்காக ஒரு கோணத்தை அவன் ஆராய்வான்; எதிர்கோணத்திற்காக நான் வாதாடுவேன். ஆனால் இதற்காக நாங்கள் அடிதடிகளில் இறங்கியது கிடையாது. எதிர் எதிரே நின்று எருதுகள் பொருதுவது போன்று சொற்களால் தாக்கிக்கொண்டு, மன்றம் கலைந்ததும் மன்றத்துக்கு வெளியே தோளோடு தோள் உராய்ந்து செல்லவேண்டிய தொழிலுக்கல்லவா படித்துக் கொண்டிருக்கிறோம். சரியோ தவறோ, சாதகமோ பாதகமோ, எந்த பாச்கு நன்றாக விளையாடுகின்றது என்று பார்ப்பதிலே தனி மகிழ்ச்சி எங்களுக்கு. கடைசியில் எங்கள் முடிவான கருத்து ஒன்றாக இருந்தாலும், இடையிலே எங்களையுமறியாமல் தோன்றும் அழகு எண்ணங்கள், அறிவுப்பொறிகள், அப்பப்பா! பெருமைக்காகச் சொல்லிக்கொள்ளவில்லை, ஏராளம், ஏராளம்!

பிரச்னை பலதரப்பட்டாலும் வாலிப நெஞ்சங்களல்லவா. பருவம், பார்வை, அதற்குச் சொந்தமான பட்டுப்புடவை, அதற்குள்ளே ஒளிந்தும் ஒளியாமலிருக்கும் உருவம்—இதைப் பற்றிய பேச்சுகள்தான் அதிகம்.

"கற்பழித்தல் வழக்குகளில் பெரும்பான்மை ஆண்களே தண்டிக்கப்படுகிறார்கள். பெண்களைத் தண்டிப்பதற்குப் போதிய சட்டங்களைக் காணோம். பெண்ணின் விருப்பம் இல்லாமல் இது எப்படி முடியும்? எனவே சம தண்டனை பெண்களுக்கும் அளிக்கப்படவேண்டு" — இது என்னுடைய வாதத்திற்கான ஆரம்பம்.

"தவறு மரணத்தைத் தழுவுவேனேயன்றி மானத்தை வழுவவிடேன் என்றுதான் இருப்பாள் பெண். ஆனால் அவள் அதை இழக்கிறாள் என்றால் அது அவளுடைய இணக்கத்தைக் குறிக்கவில்லை; இயலாத்தன்மையைத்தான் காட்டுகிறது!"—வழக்கம் போல் ஆணித்தரமாக அடித்தான் ஜனார்த்தனம்.

"போடா, கற்பழித்தல் என்பது கால் விநாடியிலோ அரைவிநாடியிலோ நடந்துவிடக் கூடியதல்ல. கொஞ்சம் ஆராய்ந்து பார்த்தால் அங்கே காலம், சந்தர்ப்பம், உணர்ச்சி எல்லாம் கூடிநின்று விளையாடி ஆணை மாத்திரமல்ல, பெண்ணையும் மோகத்தின் உச்சநிலைக்கு இழுத்துச் சென்றுவிடுகின்றன. சீறும் பருந்தாக, சிலிர்த்தெழும் சிறுத்தையாக ஒரு பெண் மாறுவாளேயானால் எந்த ஆண்மகனும் அவளை நெருங்க முடியாது."

"அப்படியா சொல்கிறாய்... கேள்...கதையல்ல நான் சொல்லப்போவது. உண்மையிலேயே நடந்த சம்பவம்...ஊர் எதுவென்று கேட்காதே...உன் வாதம் உடையப்போவதைக் கவனி!" என்றுகூறிக்கொண்டே 'பாக்கெட்டை'த் தடவினான். 'பிளேயர்ஸ்' பறிமாறிக்கொண்டோம்.

★

அந்த ஊர் சின்ன ஊர்தான். சுமார் ஆயிரம் முதல் ஆயிரத்தைநூறு வீடுகள் இருக்கலாம். அங்கே அம்பலவாணர் என்றால் யாருக்கும் தெரியும். கொஞ்சம் நிலபுலன்களும் பணப் புழக்கமும் மாத்திரம் அதற்குக் காரணமில்லை; சண்டை, சச்சரவுகளை விசாரித்து, சமாதானமாக அழகாக எல்லோர் மனத்திலும் திருப்தி ஏற்படும்படி தீர்த்து வைக்கும் அவரது நல்ல இதயம்தான். ஒரு வீட்டில் குழந்தை பிறப்பது முதல், 'ஜில்லா கலெக்டர் விஜயம்' வரை அவருக்குத்தான் முதலில் தெரியவரும். எந்த விஷயமானாலும் அம்பலவாணரைக் கேட்டுச் செய்வது ஆண்டவனைக் கேட்டு செய்வது போல என்பது ஊராரின் கருத்து.

அவர் வீட்டிலேதான் வேலாயி என்பவள் ஒரு வேலைக்காரி. மாட்டுக்கு கழனி வார்த்து, வீடு பெருக்கி, வாசல்கழுவி, கோலம் பொட்டு வைத்து பொலிவு செய்வது போன்ற வேலைகளுக்கு அவள் பொறுப்பு. சுட்டாலும் வெண்மை தரும் சங்குபோன்ற கழுத்து-தொட்டு அரைத்தாலும் மணக்கும் சந்தன உடம்பு. எப்பொழுதும் வெற்றிலை போட்டு சிவப்பேறிய பற்கள் தெரிய சிரிப்பாள்-'மாதுளை வெடித்தது' என்பது அதற்குத்தான் பொருந்தும். கலகலவென்று கன்னத்தில் குழி விழும் கள்ளமற்ற அவள் சிரிப்பிலே, ஆண் மயிலுக்குள்ள அழகு இப்பெண் மயிலுக்கு எங்கிருந்து வந்தது என்று வியக்க ஓயிலாக தண்ணீர் எடுத்து வரும் அந்த நடையிலே, அவளிடம் மனத்தை உயில் எழுதி வைத்தோரின் தொகையைக் கணக்கிட இரு கைகள் போதாது! ஆனால் ஒவ்வொருவரும் தங்கள் தாபத்தை பெருமூச்சிலே காட்டிக்கொள்வார்களேயன்றி, பேச்சிலே அல்ல. அம்பலவாணர் வீட்டு வேலைக்காரி என்பதால் மட்டுமல்ல வெட்டு ஒன்று துண்டு மூன்று என்று யாரிடமும் துடுக்காகப் பேசிவிடும் குணமும்தான் இதற்குக் காரணம். எங்கே தடம் தவறி நடந்துகொண்டால் தாடை வீங்கிப் போகுமோ என்று ஒதுங்கி நின்று, ஓரக் கண்ணால் பார்த்து, ஓராயிரம் எண்ணங்களுக்குப் பாதை அமைத்து அதில் நடை பயின்றுவிட்டு, 'ஹீம்' போட்டுவிட்டுப் போய் விடுவதுதான் அவர்கள் வழக்கம்.

இவள்மீது வெகு நாளாகவே நோட்டம் போட்டு வந்தான் கண்ணன். கண்ணனும் அம்பலவாணரின் வேலையாள்தான். அவரது சொந்த வேலைகளைக் கவனிப்பவன் என்ற முறையிலே அவளோடு சகஜமாகவும் சரளமாகவும் பேசுவான், பழகுவாள் வேலாயி. வேலையில்லா நேரங்களில் இவர்கள் சிரித்து சிரித்துப் பேசுவதை அம்பலவாணரும் அடிக்கடி பார்த்திருக்கிறார்; மனதுக்குள்ளே சிரித்தும் கொள்வார்! அவரைப்போலவே கண்ணனும், வேலாயி தன்னிடம் பழகும் முறையை வேறுவிதமாக எடுத்துக்கொண்டு, எட்டி நின்றே வேடிக்கை காட்டும் கனியைக் காரக் காத்திருந்தான். பெண், தன் வார்த்தைகளுக்குப் பங்கம் வைக்காமல் பேசினால், அதில் வெகுளித்தனம் கலந்திருக்கிறதா, வேட்கையா என்று நிதானித்து பார்ப்பதுதான் ஆணுக்குக் கிடையாதே! அவளது ஒவ்வொரு பார்வைக்கும், அங்க அசைவுகளுக்கும் வெவ்வேறு அர்த்தங்களல்லவா கற்பித்துக்கொள்கிறான்.

வேலாயி 'ஒண்டிக்கட்டை.' பெற்றோர்களையும்கூடப் பிறந்தவர்களையும் தின்றுவிட்ட 'பாக்கியசாலி'. அம்பலவாணரின் வீட்டிலிருந்து ஒரு கல்லெறி தூரத்தில்தான் அவள் குடிசையும் இருந்தது. ஒருநாள் இரவு பத்து மணிக்கு மேலிருக்கும். அவள் கண்ணயரப்போகும் நேரம், திடீரென்று கதவைத் திறந்து கொண்டு வந்த கண்ணன் 'வேலாயி' என்று வாஞ்சையோடு அழைத்தான். அலறிப் புடைத்து, சுருட்டி மடக்கிக் கொண்டு எழுந்து நின்றவள் முதலில் கொஞ்சம் திகைத்துவிட்டாள். 'என்ன கண்ணு! என்னைக்குமில்லா திருநாளா இன்னைக்கி இம்மா நேரத்துக்கு வந்திருக்கே ஐயா கூப்பிட்டனுப்பிச்சாரா...ஏன் எல்லா வேலையுந்தான் பொழுது சாயுறப் போவே முடிச்சுட்டேனே' என்று கேள்விமேல் கேள்வி போட்டு, கலவரமடைந்த அவன் கண்களில் ஏதோ இனந்தெரியாத ஓர் உணர்ச்சி பொங்கி வடிவதைப் பார்த்து 'ஏன் ஐயாவுக்கு உடம்பு காயலயிருக்கா! என்ன சங்கதி' என்று படபடப்போடு கேட்டாள்.

'ஐயாவுக்கு ஒண்ணும் இல்லே வேலாயி எல்லாம் எனக்குத்தான்.'

'உனக்கா? நல்லாயிருந்தையே சாயந்தரமெல்லாம்' என்று சொல்லிக்கொண்டே, சட்டென்று யாருக்கும் ஏற்படும் அனுதாப உள்ளத்துடன் அவன் நெற்றியில் கைவைத்துப் பார்த்தாள். அதைத் தானே அவனும் எதிர்பார்த்தான். அவள் கையைப் பிடித்துக் கொண்டு அந்த இல்லை வேலாயி. இங்கேதான் என்று தன் நெஞ்சில் அவள் கையைப் பதித்தான்.

விருட்டென்று கையை உருவிக்கொண்ட வேலாயி 'என்ன கண்ணு! பயித்தியம் புடுச்சிருக்கா உனக்கு, இதெல்லாம் ஒண்ணும் நல்லாயில்லே...நேரங்காலம் இல்லாம இப்படி வந்து ஒண்டிப்பொண்ணுகிட்ட வந்து நின்னா யாரும் என்ன நெனப்பாங்க...போ...போ." என்று அதட்டினாள்.

போகமுடியுமா அவனால். விரகதாபத்தால் வெப்பமடைந்திருக்கும் அவன் உள்ளம் குளுமையை நாடி, இன்பத்தைத் தேடு என்றல்லவா அரிக்கிறது. மோக வெறியும் கோப வெறியும் கண்களை மறைத்து விடுவது இயற்கைதானே!

"சிரிச்சு சிரிச்சு பேசுவியே வேலாயி, இன்னிக்கி மாத்திரம் என் ஆசையைத் தீர்த்துடு... சீக்கிரம் நம்ம ரெண்டு பேரும் கண்ணாளம் பண்ணிக்கலாம்"

— 8-ம் பக்கம் —

★ அ. ராஜா, எம். ஏ., எம். எஸ்சி. ★

> "போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
> தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
> ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
> எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன்: அஞ்சேன்!"

எண்ணம்

மலர் 4 ‖ 30—11—57 ‖ இதழ் 22

"ஸ்ரீ நாயக்கராம்!"

வகுப்புக் கலவரங்களும் சாதிச்சண்டைகளும் இன்னும் இந்தியத் துணைக்கண்டத்தில் ஓயவில்லை என்பதை, அண்மைக் காலச் சம்பவங்கள் சில உலகுக்கு எடுத்துச் சொல்லி, காங்கிரசின் மூக்கை அறுத்தன. சாதிகள் இல்லையடி பாப்பா-என்று கனவிலும் நினைவிலும் பாடிக்கொண்டிருந்தோர்கூட மறைமுகமாகச் சாதிப் பிரச்சினையை வளர்ப்பதாகக் குற்றம் சாட்டப்பட்டார்கள். வெட்கக் கேடு!

பெரியார், சாதியை அறவே ஒழிப்பதற்குப் பயன்படாத அரசியல் சட்டத்தை ஒழிப்பேன், எரிப்பேன் என்றார். காங்கிரஸ்காரர்களின் முகங்கள் சிவந்தன. நரம்புகள் தடித்தன. தேசீய கௌரவம் பாதிக்கப்பட்டுவிடும் என்றார்கள். சட்டமன்றத்தில் தலைவர் அண்ணா அவர்கள், காங்கிரசார் பிடித்த 'அபிநய'த்தின் தாளத் தவறைச் சுட்டிக்காட்டினார்கள். சாதி ஒழிய வேண்டுமென்பதிலே காங்கிரஸ் சர்க்காருக்கு ஆசை இருக்குமானால் அதை ஒழிப்பதற்கான காரியங்களில் ஈடுபட்டால் அரசியல் சட்ட எரிப்புச் சம்பவத்தை நிறுத்திவிட வழியிருக்கிறது என்று அண்ணா அவர்கள் சூசகமாக எடுத்துச் சொன்னார்கள். சூசகம், மறைமுகம் என்றால் இவர்களுக்குப் பிடிக்காது. பகலிலேயே பசுமாடு தெரியாதவர்களுக்கு, இரவிலே எருமை மாடு தெரியுமா? விட்டேனா பார் என்றார்கள். கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்கள். சட்டப் புத்தகத்தை எரிப்பது சரியா, அதற்குத் தண்டனை கொடுப்பது நியாயமா என்பதைக் காட்டிலும், பிரச்சினைக்கு உயிராக இருந்த சாதித் தகராறை நாம் முக்கியமாகக் கருதியதால் சாதியை ஒழிப்பதற்கு இந்தக் காங்கிரஸ் சர்க்காருக்குத் துணிவில்லை என்று இடித்துக்காட்டினோம். "விளக்கம் கேட்கவில்லை; சாதியை ஒழிக்க மார்க்கம் கேட்கிறோம்' என்றார் அமைச்சரவையில் இடம் பெற்றிருக்கும் ஒரு 'பேரறிவாளர்.'

மார்க்கம் வேண்டுமாம் மார்க்கம்! சட்டப்புத்தகத்தை எரிக்கவொட்டாமல் தடுப்பதற்குச் சொன்ன மார்க்கத்தை அவர்கள் ஏற்கவில்லை! ஏற்றுக்கொண்டால் தி. மு. க. வின் யோசனைப்படி காங்கிரஸ் நடந்துகொண்டது என்று மற்றவர்கள் சிரிப்பார்கள் என்று கருதினார்கள் போலும்!

பெரியார் குறிப்பிட்ட நாள் வந்தது. அவரது ஆணைப்படி அவரது பின்னோடிகள் ஒருசில இடங்களில் சட்டப்புத்தகத்தை எரித்தார்கள். மந்திரிகளுக்குச் சாம்பலையும் அனுப்பியிருக்கிறார்கள்.

வேடிக்கைக்காகவோ, குளிர் காய்வதற்காகவோ பெரியார் இந்தக் காரியத்தில் ஈடுபடவில்லை. அவர் எந்தக் காரியத்தை எண்ணி 'எரிப்பு'க் கிளர்ச்சியை நடத்தினாரோ அந்தக் காரியத்தை அவமதிக்கும் வகையில் தேசீய இதழ்கள் நடந்துகொண்டிருக்கின்றன. எரிப்பது அக்ரமம் என்று சொல்லலாம்-அது அவரவர்கள் கருத்து. அது பற்றிய செய்திகளை வெளியிடும்போது ஏன் சாதிப் பெயர்களைக் குறிக்கவேண்டும்.

ஸ்ரீ நாயக்கர் என்றும், ராமசாமி நாயக்கர் என்றும் கடந்த இரண்டு நாட்களாக எல்லாத் தினசரிகளிலும் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன.

காங்கிரஸ் எம்; பி. நடத்தும் ஒரு பத்திரிகையில் 'தி. க. நடவடிக்கைகளை ஒடுக்க போலீஸ் அதிகாரி ஆதித்த நாடார் பலத்த போலீஸ் பந்தோபஸ்து போட்டிருக்கிறார்' என்று செய்தி வந்திருக்கிறது. இவர்கள்தான் இப்படி என்றால், துணைக்கண்டத்தின் தலைநகராம் டில்லியிலிருந்து அதிகாரப்பூர்வமாகத் தெரிவிக்கும் வானொலியில்கூட 'ஸ்ரீ ஈ. வெ. ராமசாமி நாயக்கர்' என்றுதான் சொன்னார்கள். இது பெரியாரையோ அவரது போராட்டத்தையோ அவமதிப்பதாக அறிவுடையோர் கருதமாட்டார்கள். சாதி ஒழிப்பதில் காங்கிரஸ் சர்க்காருக்கு அறவே விருப்பமில்லை என்றுதான் கருதுவர்.

உண்மையில் சென்னை அரசியலாருக்கு சாதியை ஒழிக்க வேண்டுமென்ற எண்ணமிருக்குமானால் மிகப் பெரிய தின இதழ்களில் போட்டுவரும் சாதிப் பட்டங்களை அகற்றுவதற்குச் சட்டம் இயற்றவேண்டும். அல்லது நடவடிக்கை எடுக்கவேண்டும். செய்வார்களா?

— 4ம் பக்கத் தொடர்ச்சி —

பிராமணரே பெருவாரியாக இருக்கின்றனர். இதனால் ஏற்படுவதே இந்த எதிர்ப்பு" என்று விடை தரப்பட்டது.

அடிகள் புன்முறுவல் பூத்தார். 'அப்படியா? இதில் குற்றம் பிராமணர் மீதுதான் இருக்கிறது என்று எண்ணுகிறேன். உண்மையான பிராமணர் ஆங்கிலம் படித்து அயலாட்சிகளில் அடிமைத் தொழில் புரிவதல்ல. பிராமணருக்கு வகுக்கப்பட்ட கடமை அதுவல்ல. அவர்கள் சமஸ்கிருதமும் வேத சாத்திரங்களும் படித்து வேள்வி வழிபாடுகளில் கருத்தும் செலுத்தி மக்களுக்குச் சமயத் தலைமை கொள்ள வேண்டியதுதான் முறை. அதைத் தென்னகப் பிராமணர் பின்பற்றினால், அவர்கள் தருமமும் சிறக்கும். சிக்கலும் தீரும்' என்றார் அடிகள்.

அடிகள் விளக்கம், தமிழகப் பிராமணரையும் மராத்தியப் பிராமணரையும் ஒருங்கே நெஞ்சில் அடித்திருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை. ஆனால் தமிழகப் பிராமணர் வெறும் அரசியல் வகுப்புமட்டுமல்ல; திராவிடப் பண்பில் ஊறிய வகுப்பு. ஆகவே அவர்கள் கண்டித்தனர், கிளர்ச்சி செய்தனர். அவர்கள் பெரியார் வழிதான் பின்பற்றினர். கோட்சே வழி பின்பற்றவில்லை. ஆனால் கோட்சே செயலுக்குத் தூண்டுதல்மட்டும் தம்மையறியாமலே அவர்கள் மேற்கொள்ள நேர்ந்தது. ஆனால் வட திசையில் பொதுவாக, மராத்தி நாட்டில் சிறப்பாக நிலை இதுவல்ல. அங்கே பிராமணர் தமிழகப் பிராமணர்போல ஆட்சி வகுப்பினரல்ல, ஆட்சி வகுப்புடன் போராடி அதை முற்றிலும் அழிக்க முயன்றும் முழுதும் முடியாமல் அவதிப்பட்ட பேஷ்வர் மரபு அது. தமிழகப் பிராமணர் கூறத் தயங்கியதை அது கோட்சே உருவில் செய்யத் துணிந்தது.

இந்நிகழ்ச்சிக்கு மூல முதலான நிகழ்ச்சி இவ்வளவு கோர முடிவுடையதன்று. ஆனால் தென்னகப் பிராமணர் சென்ற தவறான பாதையையும், திராவிடப் பண்பும், திராவிட இயக்கமும் அவர்களுக்குக் காட்டி வரும் சீரிய ஒளி விளக்கத்தையும் அது நயம்படக் காட்டுவதாகும்.

அது இருபதாம் நூற்றாண்டில் இருபது கடந்த காலம். தென்னகத்தில் இன்றைய திராவிட முன்னேற்றக் கழகத்தின் மூல முன்னோடியான நீதிக் கட்சி ஆட்சி மேற்கொண்டிருந்தது அந்நாட்களில்! ஆனால் ஆட்சி நீதிக் கட்சியின் கையிலிருந்தாலும், இன்றும் ஆளும் வகுப்பினர் உள்ளத்திலே திராவிட முன்னேற்றக் கழகப் பண்பு உள்ளூரப் பரவி வருவதுபோல, அன்று அரசியல் வடிவிலில்லாவிட்டாலும் ஆன்மிக வடிவில், அறவடிவில் காந்தியாரின் அருட் பண்புகள் மக்களிடையேயும் நீதிக் கட்சி ஆட்சியாளரிடையேயும்கூடப் பரவி வந்தது. பல நீதிச் கட்சித் தலைவர்கள் காங்கிரசின் அரசியல் கோட்பாட்டை ஏற்காமலே காந்தியடிகளின் அருளுருவின் வீர வழிபாட்டில் தம்மையறியாது இழைந்து வந்தனர். அவர்களில் சிலர் திரை மறைவில், ஆனால் தூய உள்ளத்துடன், தலைமை யாட்சியாளரிடையிலேயே மெல்ல காந்தீயப் பிரசாரமும் காங்கிரசுப் பிரசாரமும் தொடங்கினர்.

காந்தியடிகள் வந்தபின் காங்கிரஸ் இயக்கம் பழய அரசியல் இயக்கமாக இல்லை. மனங் கவர்ந்து ஆட்கொள்ளும் மக்கள் இயக்கமாகி வருகிறது. அதற்கு வெளியே இருந்து நாம் எதிர் நீச்சு நீந்துவானேன்? காங்கிரசிலேயே சேர்ந்து பிராமணரல்லாதார் நலனுக்காகக் காந்தியடிகளின் தூய அருள் தலைமையில் போராடுவோமே என்று அவர்கள் பேசினர்.

நீதிக் கட்சியின் மூல முதல்வர்களில் ஒருவர் நீங்கலாக மற்றவர்கள் காங்கிரசில் இருந்து வளர்ந்தவர்களே. அதைத் தோற்றுவித்த முதல் டாக்டர் நடேசனே காந்தியடிகளுடனொத்த அருளாளர், மக்கள் தொண்டர். 'மகாத்மா'ப் பட்டம் பெறாத ஒரு மகாத்மா. நீதிக் கட்சியின் இதயம் அவரே. இதயமும் மூளைகளும் பேசி ஒரு முடிவுக்கு வந்தன. நீதிக் கட்சியினர் படிப்படியாகக் காங்கிரசில் சேருவதென்றும், ஆனால் சேரு முன்னால் தம்மனங் கவர்ந்த அருள் தலைவர் காந்தியடிகளுடன் தம் கருத்துக்களைக் கலந்து பேசுவதென்றும் தீர்மானமாயிற்று.

பிராமணர் அல்லாதார் நலனில் தம் அக்கரைகாட்டுவதற்காக, காங்கிரசிலுள்ள பிராமண நல்லோர் எல்லாரும் சேர்ந்து, ஐந்தாண்டுகள் அரசியற் பணிகளில் புதிதாக பிராமணரைச் சேர்க்காமலிருந்து சமத்துவத்தில் தம் அக்கரை தெரிவிக்கவேண்டுமென்றும், காந்தியடிகள் இதனைப் பிராமண அன்பருக்கு பரிந்துரைக்க இணங்கினால், தாம் காங்கிரசில் சேருவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

காந்தியடிகள் சென்னை வந்தபோது நீதிக்கட்சித் தலைவர்கள் அவரை நேரில் பேட்டி கண்டு இதை தெரிவித்தனர்.

உலகப் பெரியாரானாலும், காங்கிரசை உயிராகக் கொண்டவர் காந்தியடிகள். அவர் உள்ளம் பூரித்தது. 'ஐந்தாண்டுகள்தானா? ஐம்பது ஆண்டுகள் கேட்க நான் ஒத்துக்கொள்கிறேன். சென்னைப் பிராமணருடன் நீங்கள் நெருங்கிப் பழகவில்லை. அவர்கள் எவ்வளவு நல்லவர்களென்பது உங்களுக்குத் தெரியாது. நான் கேட்டால், உங்கள் மகிழ்ச்சிகரமான முடிவுக்கெதிராக, ஐம்பதென்ன, நூறாண்டு கேட்டால் கூட அவர்கள் தாராளமாக இணங்குவார். சக்ரவர்த்தி ராசகோபாசாரியார் போன்ற அருளாளர் நிலையாகக்கூட ஆத்மீக சேவையிலிறங்கும்படி தம் தோழர்களைத் தூண்டத்தக்கவர் என்பதில் எனக்கு ஐயமில்லை, என்றார் அடிகள்.

இப்பேச்சு விவரம் கேட்ட சென்னைப் பத்திரிகைகள் கலகலத்தன. வெள்ளையுள்ளம் படைத்த காந்தியடிகளை அரசியல் சூழ்ச்சியில் சிறந்த நீதிக்கட்சியாளர் குழியில் தள்ளிவிட்டதாகக் குமுறினர். காந்தியடிகளிடம் சென்று வாதித்து, அம்முடிவை மறந்துவிடும்படி வற்புறுத்தினர். 'கண்ணன் காட்டிய வழி' மகாத்மா வழியாயிற்று.

- தொடரும் -

விற்பனையாளர் தேவை.
திராவிட முரசு
அரசியல்-கட்சி-திரை
மாதம் இரு ஏடு. விலை 7 காசு.
நிர்வாகி, திராவிட முரசு,
23-97, மாதவரம் நெடுஞ்சாலை,
சென்னை-11.

இதுதான் திராவிடநாடு

-10-

கா. அப்பாதுரையார்

இன வேற்றுமை காட்டாத தமிழரின் இனப் பண்பு, அதாவது திராவிடப் பண்பு மொழி கடந்து, இனங்கடந்து தேசங் கடந்து செயலாற்றவல்லது. ஆனால் இன வேற்றுமையே பண்பாகக்கொண்ட ஆரியப் பண்பு அவ்வினத்துக்கே கேடும் பழியும் சூழ்வது. இதனைத் தமிழகப் பிராமணர் நிலையும் காந்தியடிகளாரின் வாழ்க்கையுமே மெய்ப்பித்துக் காட்ட வல்லன.

தமிழகத்திலும் சரி, தமிழகத்துக்கு வெளியேயுள்ள பிற தென்னகப் பகுதிகளிலும் சரி-பிராமணர் அறிவிலும் நாகரிகப் புறப் பண்பிலும் வாழ்க்கைத் தரத்திலும் மற்றத் தென்னாட்டவரைக் காட்டிலும் உயர்ந்த நிலையுடையவராகவே விளங்குகின்றனர். இங்கே அவர்கள் ஆட்சியினத்தில் மிகப் பெரும் பங்கு உரிமையுடையவர்களாக, ஒட்டத்தட்ட ஆட்சியினமாகவே இயங்குகின்றனர் என்பதும் தெளிவு. இதனால் அவர்கள் தற்பெருமை கொண்டு, தம்உயர்வுக்கு ஆரியக்குருதி-ஆரியப் பண்பாடு தான் காரணம் என்று கருதி, அந்த ஆரிய இனத்தையும் ஆரியப் பண்பாட்டையுமே வளர்க்க அரும்பாடு படுகின்றனர். ஆனால் அவர்கள் ஒரு சிறிது சிந்தனைக்கு வாய்ப்பளித்தால், இந்நம்பிக்கையின் பொருந்தா முரண்பாடு தெற்றென விளங்கும். பிராமணர் உயர்வுக்கு ஆரியக் குருதியோ, ஆரியப் பண்பாடோ, ஆரிய மரபோ காரணமென்று கொள்வதானால், சிந்து ஆற்று வெளிப் பிராமணர் கங்கை வெளிப் பிராமணரிலும், கோதாவரிக் கரைப் பிராமணர் காவிரிக் கரைப் பிராமணரிலும் மேம்பட்டவராயிருத்தல் வேண்டும். பண்டோ இன்றோ அத்தகைய நிலை இருந்ததாக, இருப்பதாக யாரும் கூறமுடியாது. வேத காலந் தொடங்கிப் பாணினி காலம் வரை வடக்கே இந்நிலை இருந்ததென்பது உண்மையே. ஆனால் இது பிராமணர் நிலையல்ல. ஆரியர் நிலைமட்டுமே. சிந்து ஆற்று வெளி ஆரியர் அன்று சிந்து ஆற்றைப் புண்ணிய ஆறாகவும், சிந்து வெளியைப் புண்ணிய நிலமாகவும், தற்காலம் ஆப்கனிஸ்தான் எல்லையிலிருக்கும் தட்ச சிலத்தைப புண்ணிய நகரமாகவும் கொண்டாடினர். கங்கை வெளியை ஆரிய திராவிடக் கலப்பினத்தவரின் திருந்தாமொழிப் பகுதியாகக் கருதி இழித்துரைத்தனர். ஆனால் பாரத காலத்தில் யமுனைக் கரையும், இராமாயண காலத்துக்குள் கங்கை கரையுமே ஆரிய நாகரிகத்தின் தலைமையிடங்களாயின. இக்காலத்திலே புராணங்கள் இயற்றப்பட்டனவாதலால் அன்று முதல் இன்றளவும் சிந்து ஆறு புண்ணிய ஆறு என்பது மறக்கப்பட்டுக் கங்கை ஆறே புண்ணிய ஆறாகவும், சிந்து வெளியாகிய பாஞ்சாலமே பழய பிரம தேசம் அல்லது ஆரியரிடம் அல்லது புண்ணிய தேசம் என்பது மறக்கப்பட்டு, கங்கை வெளியே புண்ணிய நிலமாகவும், தட்ச நிலமே புண்ணிய நகரம் என்பது மறக்கப்பட்டு, காசியே புண்ணிய நகரமாகவும் கருதப்பட்டு வருகின்றன. ஆயினும் அதன்பின் கோதாவரியிலும் காவேரியிலும் தங்கிய பிராமணர் தாம் திராவிட நாட்டில் புதிதாக வளர்த்த பண்பாட்டையே ஆரியப் பண்பாடாக்கி, அதைக் காசிவரை பரப்பினர். காவிரி தலை சிறந்த புண்ணிய ஆறாகவும், காஞ்சி தலை சிறந்த புண்ணிய நகரமாகவும் ஆயிற்று. நகரங்களில் சிறந்த நகரம் காஞ்சி (நகரேஷு காஞ்சி) என்ற பழஞ் சொல் காளிதாசன் காலத்திலேயே (கி. பி. 5-ம் நூற்றாண்டிலேயே) புதிய ஆரியத்தின் பழஞ் சொல்லாகிவிட்டது. புதிய ஆரிய சமயத்தின் எல்லா ஆச்சாரியரும் தென்னகத்திலேயே பிறந்து காஞ்சியை வாழ்வகமாகவோ பயிற்சித் தளமாகவோ ஆக்கிக்கொண்டிருந்தவர்களே என்பதை யாவரும் அறிவர்.

இன்றும் சிந்து வெளி பிராமணரைவிடக் கங்கை வெளி பிராமணர், அவர்களைவிடக் கோதாவரி, காவிரி, தண்பொருநைக் கரைப் பிராமணரே பிராமண சமுதாயத்தில் பண்பாட்டிலும் அறிவிலும் திறமையிலும் தலை சிறந்தவர்களாக விளங்குகின்றனர்.

பிராமணர் உயர்வுக்குக் காரணம் அவர்கள் ஆரியக்குருதியோ, ஆரிய மரபோ, ஆரியப் பண்பாடோ அல்ல, அவர்கள் திராவிடப் பண்பாட்டுத் தொடர்பே என்பதை இது தெள்ளத் தெளியக் காட்டுகிறது. தென்னாட்டில் அவர்கள் பெற்ற தலைமை நிலைக்குத் தென்னக அரசரும் செல்வரும் மக்களும் அவர்களுக்கு அளித்த தனிச் சலுகைகளே காரணம் என்பதையும் இதே நிலை விளக்குகிறது. ஏனெனில் பிராமணருக்கும் ஏனைய நாட்டு மக்களுக்கும் இடையே தென்னகத்தில் உள்ள மலைமடுவான வேற்றுமை வடதிசையில் பொதுவாக, சிந்து வெளியில் சிறப்பாக, இல்லாத ஒன்று. மற்றும் ஒரு செய்தியும் இதை வலியுறுத்திக் காட்டுகிறது. தென்னகத்திலும் ஆந்திரம், தமிழகம், மலையாளம், கன்னடம் ஆகிய நான்கு பகுதிகளிலும் அவர்களுக்குத் தரப்பட்ட சலுகைகள் வேறு வேறு வகைப்பட்டவை. தமிழகச் சலுகைகளில் சமயச் சார்பான மக்கட் சலுகை மிகுதியானாலும், அதனிலும் அரசர், செல்வர் ஆகிய ஆட்சி வகுப்பினர் அளித்த அரசியல் சலுகை, கல்விச் சலுகையே மிகுதி. அதனால் அவர்கள் அடைந்த உயர்வும் அறிவு வகுப்பு, ஆட்சி வகுப்பு என்று முறைப்பட்டதாகவே பெரிதும் இருந்து வருகிறது. ஆந்திர நாட்டில் அவர்கள் பெற்ற சலுகை பெரிதும் சமயச் சலுகைமட்டுமே. அவர்கள் உயர்வும் ஆட்சி வகுப்பு, அறிவு வகுப்பு என்ற அளவில் பெரு மதிப்படையவில்லை. மலையாள நாட்டிலும் அதன் வடதிசைக் கன்னடப் பகுதியிலும் (அதாவது பழய சேர நாட்டில்) அவர்களுக்குச் சமய, சமுதாய உயர்வும் நிலப்பண்ணை முறை சார்ந்த உயர்வும் அளிக்கப்பட்டன. இதனால் இங்கே பிராமணர் அரசியல் அறிவு வகுப்பாகவோ ஆட்சி வகுப்பாகவோ அமையாமல், கலை வகுப்பாகவும் சமய ஆட்சி வகுப்பாகவும், நிலச் செல்வ ஆட்சி வகுப்பாகவும் (ஜன்மிகள் அல்லது ஜமீன் வகுப்பாகவும்) நிலவுகின்றது.

சமண சமயம் நீண்ட காலமும் வீர சைவ சமயம் அதன் பின்னும் நிலவியிருந்த கன்னட குசராத்து நாடுகளிலும் தமிழக வைணவம் பரவிய மராத்தி வங்கநாடுகளிலும் பிராமணர் இவ்வளவு எளிதாக உயர்வு பெறமுடியாமல், மற்ற ஆட்சி வகுப்பினருடன் நீடித்துப் போராடி வந்துள்ளதும் இன்னும் வடதிசையில் ஆட்சி வகுப்பினரை அண்டி வாழ்பவராகவோ மக்களுடன் மக்களாகவோ வேறுபாடில்லாமலோ வாழ்வதும் காண்கிறோம். இன்றளவும் வரலாற்றில் இவ்வேறுபாடுகளின் தடங்களைப் பார்க்கலாம்.

இனங்கடந்த இயல்பான திராவிடப் பண்பின் ஆற்றலையும், ஆரியப் பண்பாட்டின் அழிமதியையும் காந்தியடிகள் வாழ்க்கையிலே ஒருங்கே காணலாம். பாரத தேசியத்தை ஏற்ற காந்தியடிகள் திராவிட இனத் தேசியத்தை முற்றிலும் மறுக்கவே முற்பட்டிருந்தார் என்பதை மேலே கண்டிருக்கிறோம். ஆனால் அதே சமயம் திராவிடரின் இன வேறுபாடற்ற பண்பு அவர் வாழ்க்கையில் ஒளி விசிற்று என்பதில் ஐயமில்லை. அவரே இப்பண்புக்குக் காரணமாகப் பகவத்கீதை, இயேசு பிரானின் மலைமேல் போதனை, நபிநாயகம். டால்ஸ்டாய் போன்றவர் அருள் நெறிகள், வள்ளுவர் குறள் ஆகியவற்றை ஒரே படியில் வைத்து மூல ஒளிகளாகக் கண்டுள்ளார். ஆனால் இயேசு பிரான், நபிநாயகம், டால்ஸ்டாய், வள்ளுவர் ஆகியோர் பண்புகள் அவரை 'உலகப் பெரியார்', 'மகாத்மா' ஆக்கின என்பதில் ஐயமில்லை. அவற்றுடன் ஒப்பாக அவர் கொண்ட கீதையோ அவர் வாழ்க்கைக்குக் கூற்றுவனாக முடிந்தது!

திராவிடத் தேசியத்தை மறுத்த அடிகளின் இறுதித் தொழுகைக் கட்டத்தை அடுத்தே மற்றொரு தொழுகைக் கட்ட நிகழ்ச்சியும் அதன் ஒரு மூல நிழல் என்று கொள்ளத்தக்க அவர் தேசிய வாழ்வின் தொடக்க நிகழ்ச்சி ஒன்றும் இதனை முனைப்பாக நம் கண்முன் படம் பிடித்துக் காட்ட உதவுகின்றன.

'தென்னகத்தில், தமிழகத்தில், பிராமண எதிர்ப்பியக்கம் ஒன்று வகுப்புவாத முறையில் உயிராற்றலுடன் இயங்குகிறது. அது தமிழகக் காங்கிரசைக்கூட ஆட்டிப் படைக்கிறது. இதுபற்றித் தங்கள் கருத்து விளக்கம் அறிய விரும்புகிறோம்' என்று தொழுகைக் கட்டத்தில் ஒருவர் கேட்டார்.

'அதற்குக் காரணம் என்ன? எத்தனையோ சாதிகள் தமிழகத்தில் இருக்க; பிராமணரைமட்டும் இப்படி ஒரு சாரார் எதிர்ப்பானேன்?' என்று கேட்டார் அடிகள்.

'கல்வித் துறையிலும், எல்லா நிலையங்களிலும், பணிமனைகளிலு

— 3ம் பக்கம் —

5-12-57ல் எங்கும் கிடைக்கும்!

முல்லை

டிசம்பர் இதழ்

'என் பாட்டை நான் கேட்டேன்'

நகைச்சுவை நடிகர் சந்திரபாபு கட்டுரை

மற்றும்

பல சுவையான எழுத்தோவியங்கள்.

முல்லை :: சென்னை-6.

கேள்விப் பெட்டி

பன்மொழிப்புலவர் பதில் தருகிறார்

ச. இராமசாமி,
கயற்கண்ணிபுரம்.

1. தமிழ் மறுமலர்ச்சி வானின் முழு நிலவு எனப்படும் பாரதியார் இந்நாட்டை ஆரிய பூமி, ஆரிய நாடு, ஆரிய ராணி என்று பலவிடங்களில் கூறியிருப்பது இனிப்புக் கொடுத்து நஞ்சூட்டுதல் போலிருக்கிறது என்று கருதுகிறேன். தங்கள் கருத்து யாது ?

2. சிலப்பதிகாரத்தில். கண்ணகி மதுரையை எரித்தல், வெட்டுண்டு இறந்த கோவலனோடு பேசுதல், கண்ணகி கோவலனோடு தேவ விமானத்தில் மறைதல் போன்ற நிகழ்ச்சிகள் உண்மையில் நடக்கக்கூடியனவா ? அவை பகுத்தறிவுக்கு ஒத்தது தானா ?...என்று கேட்போருக்கு யாது விடையிறுப்பது ?

அன்னையவள் பெற்ற
அருமணியில் ஓர்மணியாய்
மின்னுகின்ற நற்புலவா !
மேதையே !-பன்மொழியும்
பாங்குடனே கற்றும்
பகுத்தறிந்து கூறுகின்ற
திங்கரும்பே என்ஐயம் தீர் !

1. திராவிட இயக்கமும் கால்டுவெலின் திராவிட ஒப்பியல் மொழி நூலும் பிறக்குமுன், அதாவது ஐம்பது அறுபது ஆண்டுகளுக்குமுன், திராவிடமென்ற சொல் சமஸ்கிருதவாணரால் பொதுவாகத் தென்னாட்டுக்கும் சிறப்பாகத் தமிழுக்கும் பயன்படுத்தப்பட்டு வந்தது. ஆரிய என்ற சொல் பொதுவாக வட இந்தியாவுக்கும் சிறப்பாகக் கங்கை நாடு, அதாவது இன்றைய இந்தி வழங்கும் நாடாகிய உத்தரப் பிரதேசத்துக்கும் சமஸ்கிருதத்துக்கும் வழங்கப்பட்டது. இதற்குமுன்பாக, புத்தர் மகாவீரர் காலங்களில் (கி. மு. 5-ம் நூற்றாண்டில்) அக்காலத் தமிழ் நாகரிகத்துடன் ஒப்பிடத்தக்க உயர் நாகரிகமாக உத்தரப் பிரதேசம், பிகார் ஆகியவற்றின் நாகரிகமே ஆரிய நாகரிகம் எனச் சிறப்பிக்கப்பட்டது. தமிழ்ச் சங்க நூல்கள் 'ஆரியம்' என்ற சொல்லை இப்பொருளிலேயே குறித்தன—பிற்பட்ட காலச் சமஸ்கிருத நாகரிகத்தையன்று.

பாரதியார் காலத்தில் 'ஆரியம்' என்ற சொல் இந்த எல்லாப் பொருள்களும் கலந்து மயங்கியதுடன், தமிழ்த் தொடர்பற்ற மொழிகள், தமிழகத்துக்கு அப்பாற்பட்ட தொலை நாடுகள், சமஸ்கிருதத்தின் உரிமை தமதெனப் பொதுவாகக் கொண்டாடிய உயர் வருணத்தவர், சிறப்பாக பிராமணர் ஆகிய கருத்துக்களையும் குறித்தது.

சைவர் என்ற சொல் இன்றைய தமிழில் ஒரு சாதியினர், ஒரு மதத்தினர், ஒரு (மரக்கறி உணவும்) பண்பாடு என்ற மூன்று பொருளை மூவேறு சூழல்களில் குறிப்பது போல, ஆரியம் என்ற சொல் ஒரு மொழி (சமஸ்கிருதம்), ஒரு நாடு (கங்கை நிலம்), ஒரு சமயச் சார்பான நாகரிகம் (வைதிகம்), ஒரு சாதி அல்லது உச்ச உயர் சாதி என்ற இத்தனை பொருளையும் பாரதியார் காலம்வரை குறித்தன. திராவிடம் இத்தனை பொருளிலும் ஆரியத்துக்கு எதிர்ப்பதமாகப் பொதுவாக எல்லாராலும், சிறப்பாகத்தமிழகத்துக்கு வெளியேயும் வழங்கிற்று.

பாரதியார் சாதி வேறுபாடு, இன வேறுபாடு பாராட்டாதவர்தான். ஆனால் வேறுபாடு பாராட்டாதவரும் தம் சாதி, இனத்தில் பெருமை கொள்ளுவதை இன்றும் நாம் காணலாம். இத்தகைய பெருமை சில சமயம் 'நாகரிக'ப் பண்மையில் மிளிர்தலும் எளிது. பாரதியார் தம் சாதி, தம் இனத்தில் பெருமை கொண்டதில் தவறில்லை. பிறரைப் புண்படுத்தா வகையில் அவர் சமரசப் பண்பு அதை நாகரிகமாகவும் கொண்டு மகிழ்ந்திருத்தல் இயல்பு. முற்றிலும் கண்டிக்கத்தக்கதும் அல்ல. அவர் கால நிபுணரின், திராவிட இயக்கத்தின் ஆற்றலால் மாறுபடாத அவர் சமுதாய நிலையை உணரின், அவர் தவறு ஒரு காலத்துக்கும் சமுதாயத்துக்கும் உரிய தன்றி அதன் 'பொன்னுனை' பிரதிநிதியாகிய அவரைச் சாருதற்கில்லை.

ஆரியத்தைப்பற்றிய இதே பெருமையைக் கவிஞர் பாரதி 'திராவிடம்' என்ற சொல்லில் கொண்டதில்லை. மொழியளவில் மட்டும் வைத்துத் 'தமிழ்' என்ற சொல்லிலேயே கொண்டார். திராவிட இயக்கத்துக்கு வெளியிலே உள்ள 'அரைகுறை'த் தமிழ்ப் பற்றுளர் நிலை இனியும் இதுவே. தவிர, இளங்கோவையும் வள்ளுவனையும் பாரதியார் கர்பனைப்போலப் போற்றத் தவறவில்லையானாலும், எடுத்தாண்ட கதை, உவமை, கற்பனைகளில் இளங்கோவோ, வள்ளுவனோ மிகுதி இடம் பெற்றதில்லை.- கம்பர்கூட இடம் பெற்றதில்லை. சமஸ்கிருத மரபும் புராண இதிகாசங்களுமே இடம் பெற்றன. பாரதியாரின் இக்குறைபாடுகள் கூட அவரை அவர் காலத்தின் முன்னோடி, திராவிட இயக்கம் தோன்றித் தமிழ் சமுத்தாயத்தின் முன்னோடியாக்கத் தவறவில்லை என்பதைக் காணின், அவர் காலம், அச்சமுதாயப் பிற்போக்கு, தமிழ் அரைகுறை ஆர்வத்தன்மை தெற்றென விளங்கும்.

கால, சமுதாயப் பின்னணி காணாமல் இன்றைய திராவிட இயங்கத்தாரோ, மறு மலர்ச்சிக் காலத்தவரோ பாரதிகண்கொண்டு எளிதில் எதுவும் காணுதல் இயலாது. வியப்பு என்னவெனில் அந்நிலையில்கூட அவர் 'நம் முன்னோடியாக' நம் காலத்தைக் கனவு காண்பவராக முடிந்தது என்பதே.

தம்மைத் திராவிடர் என்றல்ல, ஆரியர் என்றே கருதிய தமிழர் பாரதி. மொழியால்தான் தமிழர், ஆனால் இனத்தில் ஆரியர் என்றே அவர் தம்மைக் கருதினார் என்றல் வெளிப்படை.

2. வியத்தகு நிகழ்ச்சிகள் நடக்கும்போது, இன்றுகூட, நிகழ்ச்சிகளின் சமகால மக்களிடையிலேயே நிகழ்ச்சிகளின் வியத்தகு பண்பு பெருக்கப்பட்டுவிடுவதையும், இயற்கை மீறிய கூறுகள் சேர்த்திணைக்கப்பட்டு விடுவதையும் காணலாம். இதில் மக்கள் உள்ளத்தின் வீர வணக்கப் பண்பும், கதை கூறுபவர் உணர்ச்சிப் பெருக்கப் பண்பும் ஒத்தாசை செய்கின்றன. சிலப்பதிகாரத்தில் கண்ணகி விமான மேறுதல் திரும்பி வந்து காட்சி தரல் ஆகிய காட்சிகள் கானக்குறவர் உணர்ச்சிப் பின்னணி மூலமே நாடகப் பண்பமையக் காட்டப்பட்டுள்ளன. வெட்டுண்ட கோவலனொடு பேசுதல், மதுரை எரியூட்டல் ஆகிய நிகழ்ச்சிகளும் இத்தகைய உணர்ச்சிப் படப்பிடிப்புகளே.

'காவிய வாய்மை' உலகியல் வாய்மை போன்றதன்று. அது புற நிகழ்ச்சிகளைப் படம் பிடிப்பதன்று, அக உணர்ச்சிகளைப் படம்பிடிப்பது. அகம், புறம் இயற்கையின் இரு பிரிவுகளே. இயல் நூல்கள் பொதுவாகப் புற இயற்கை வாய்மை பேணும். இயல் கலைகள், இயல் காவியங்கள் அகஇயற்கை வாய்மை பேணும். இலக்கியத்தில் இரு வகைகளும் உண்டு. புற வாய்மை பேணும் இலக்கியப் பண்பு வாய்வியல் (Realism) அமைவியல் (Classcism) எனப்படும். அக வாய்மை பேணும் இலக்கியப் பண்பு புத்தார்வ இயல் (Romenticim) எனப்படும். சங்க இலக்கியம் பொதுவாக முன்வகை சேர்ந்தது. சிலம்பு மணிமேகலை, சிறப்பாக சிலம்பு பின்வகை சார்ந்தது. ...கிருத இலக்கியமும் பி... தமிழ்க் கம்ப ராமாயணம் ... இலக்கியமும் பெரிதும் சில... பின்பற்றின. ஆனால் ... அக வாய்மையை அவ... உணர்ச்சி மிகை யுரையாக்கி... வாய்மையும் கொடுத்தன. ... இலக்கிய, சிலம்பு இலக்கி... வாய்மைப் பண்புகளின் மரபு... நாட்களுக்குள் கெட்டுவிட்... உணரப்படாது மறக்கப்பட்... டன.

'உண்மையில் நடக்கக்கூடு...வா?' என்ற கேள்வியே இவ்வ... கத்தைச் சுட்டிக் காட்டுவது ஆ... நடப்பவை வேறு, நடக்க... யவை, நடப்பவை கூறுவது... லாறு. ஆனால் நல்ல வரலாறு... பது கூறுவதுமட்டுமன்று, ... வாய்மை இடையே நடப்... உயிர் நிகழ்ச்சியாக்கி, காரண... யத் தொடர்பு விளக்கிக்காட்டு... புதினங்கள் நடப்பவற்றைக்... வில்லை, நடக்கக்கூடியவற்... கூறுபவை; புதினங்களில் நட... கூடிய பொது நிகழ்... கூறுவன நடக்கக் கூடிய... நிகழ்ச்சி கூறுவன (possible) ... கக் கூடாதனவற்றை நடக்க... யவையாக்கிக் கூறுவன (ro... எனப் பலவகை. சிலம்பு க... வகையில் அகவாய்மைமூலம் ... கக் கூடாதவற்றை நடந்தன... கருதும் நிலையிலுள்ள அக நிக... களை உள்ளபடியே படம் பிடி... காட்டுவது ஆகும்.

நிழற் படம் உள்ளதை ... படியே புற வாய்மைப்படி ... வது. கலைஞன் வண்ணப் ... உள்ளதைக் கலைஞன் அகங்... படியே காட்டுவது, கலையுண... என் காணச் செய்வது. ... கைய உணர்ச்சி ஒற்... உணர்ச்சி வாய்மை, பண்பே... பெருமை கிரேக்க இலக்கி... கும் தமிழிலக்கியத்துக்கும் ம... சிறப்பு வகையில் பொது... பண்புகள் ஆகும்—இவற்றை... சிறப்பாக பிற்கால ஆரிய, பி... தமிழ்க் கற்பனைகளிலிருந்து... தறியமாட்டாமல், அவ... இயற்கை மீறிய நிகழ்ச்... இன்னும் தமிழக மாந... கொள்கின்றனர் என்பதை... கேள்வி காட்டுகிறது. ஷேக்... ஹாம்லட் நாடகத்தின் பேய்... பின் வானகக் காட்சிகள், ... காலப் புராணக் காட்சிகள் ... நம்ப வேண்டுபவை ... நம்பாதவர்களையும் ... சுவைத்துவை வைப்பவை ... அருநிகழ்ச்சி கடந்த அக... பண்புகளைக் காட்டுபவை.

அவை முரண்பாட்டை ய... முரண்பாட்டின் தன்மையை... டுபவை. தெய்விகத்தையல்ல, ... விகம் காணும் உள்ளத்... உணரும் தெய்விகப் ப... விளக்குபவை, உள்ளத்தில் ... பவை.

சென்ற கிழமை பெங்களூரில் நடைபெற்ற தமிழ்விழாவில் நாவலர் நெடுஞ்செழியன், கண்ணதாசன், கா. அப்பாதுரையார், டி. கே. ... வாசன், ஆர். எஸ். பாண்டியன், ஜெகதீஸ்வரி அம்மையார், எஸ். வி. பதி ஆகியோர் கலந்துகொண்டனர்.

அத்திப் பழம்

- 4 -

ம் ஒரு நிலையில் நிற்காததி றல் அவள் அடைந்த அல்லலை , தவித்த தவிப்பையும்கண்ட ரியசாமி 'உன் வேலையைப் , எல்லாம் காலையில் வந்து டுவான், என்று எவ்வளவோ றி சொன்னபிறகுதான் மாம் காலையில் வந்து விடு ன்'' என்று அவள் மனம் றினாள்.

னால் அவள் எதிர்பார்த்த ஞான சம்பந்தன் மறுநாள் லயிலும் வரவில்லை; மாலை வரவில்லை. அடுத்த நாள் லயிலும் வரவில்லை; மாலை வருவான் என்று அவர்கள் ர்பார்க்கவும் இல்லை. அந்த ண்டு நாட்களும் சிவகாமி மாள் "என்னமோ தெரிய லையே அவன் வராமல் நக்க மாட்டானே" என்று டிக்கு நொடி சொல்லித் தன் த்தில் இருந்த சுமையை நீக்கிக் கொள்ளத் துடித்தாள்.

சரி அடுத்தவாரம் கட்டாயம் வான்'' என்று அவளே தேறி ஓய்ந்தாள். ஆனால் ஓய்வு ஒரு நாளுக்குமேல் த்து நிற்கவில்லை. திங்கட் ம இரவு பெரியசாமி செய் தாளைப் படித்துச் சொல்லிக் ண்டு வந்தபோது சிவகாம னைவு சென்னைக்குப் பறந் முன்னேயெல்லாம் அவருக் செய்தித்தாள் படிக்கவேண் என்ற வேட்கையே இருந்த . ஆனால் தன் மகன் கல் மாணவனான பின் தானும் வது படிக்கவேண்டும் ற ஆசை வந்துவிட்டது. ற்கு முன்னே எப்போதாவது றை நகரப் பக்கம் போகும் து கையில் சில்லறையுட ந்து வாங்கவேண்டும் என்ற ண்ணமும் ஏற்பட்டால் ஒரு திதழை வாங்கிக்கொண்டு வார். சாய்வு நாற்காலியில் ந்து கொண்டு மண்ணெண் ய் விளக்குத் திரியைப் பெரி க்கி வைத்துக்கொண்டு தோ பார்த்தாயா கும்ப ணத்தில் கோயில் இடிந்து டு பேர் செத்துப்போனார் இதிலே போட்டிருக் து'' என்று சிவகாமியை ழத்துக் காட்டுவார். 'ஐயோ ம் யார் பெற்ற பிள்ளை ரா' என்று அவள் தன் கழி க்கத்தை வெளிப்படுத்து . அவ்வளவுதான் மறுபடி எப்போதோ ஒருமுறைதான் திதாள் அந்த வீட்டில் ட்டும்.

ராமப்புரங்களில் எவ்வளவு பெரிய பணக்காரர் ஆனாலும் செய்தித் தாள் வாங்குவது வீண் செலவு என்று கருதியிருந்த காலம் அது. இன்றுமட்டும் என்ன, எத்தனையோ பேர் எவரோ வாங்கிய தாளில் இங்கு ஒரு செய்தியும் அங்கு ஒரு செய் தியும் படித்துவிட்டு நானும் செய் தித் தாளைப் படித்து விட்டேன், என்று மன அமைதி அடைந்து விடுகின்றனர். நூல்கள் வாங்கு வது என்றாலும் அதேபோல் அது ஏதோ தெரியாதவர்கள் செய்யும் அநாவசிய செலவு என்று தங்களைத் தெரிந்தவர்கள் பட்டியலில் சேர்த்துக்கொள்ளு கின்றனர். செலவு மிகுந்துவிட் டது கையில் பணம் இல்லைஎன்ற நிலை வந்துவிட்டால் எதைக் குறைக்கலாம் என்று எண்ணிப் பார்க்கின்றவர்கள் முதலில் நாளிதழ்கள் நூல்கள் வாங்கு வதை நீக்கிவிட வேண்டும் என்றுதான் கருதுகின்றனர். அப் படிப்பட்ட நிலையில் பெரியசாமி எப்போதோ ஒருமுறை செய்தித் தாள் வாங்கியதை பெரியசெயல் என்று சொல்ல வேண்டும்.

தன் மகன் கல்லூரி மாணவன் ஆன பின்னர் ஒரு நாளிதழுக்குப் பணம் செலுத்தி நாள்தோறும் அதைப் படிக்கும் பழக்கத்தை உண்டாக்கிக்கொண்டார். தான் மட்டும் படிப்பதோடு நின்று விடாமல் தன் மனைவியையும் உடன் வைத்துக்கொண்டு படித் துக் காட்டினார். முதலில் அவ ளும் 'இரண்டுபேர் செத்துப் போனார்கள்' 'நான்கு பேருக்கு அம்மை நோய் கண்டது' என் பதைப் போன்ற செய்திகளைத் தான் சுவையுடன் கேட்டுக் கொண்டுவந்தாள். ஏதாவது அரசியல் நிகழ்ச்சியைப் படித்துக் காட்டினால் "சரிதான் போங்கள் அதெல்லாம், எனக்கு எங்கே புரிகின்றது நீங்களே படித்துக் கொள்ளுங்கள். எனக்குத் தூக்கம் வருகின்றது நான் போகின்றேன்'' என்று கொட் டாவி விட்டுக்கொண்டே எழுந் திடுவாள்.

ஆனால் ஞானசம்பந்தன் கல் லூரிக்குப் போன பின்னர் நாள் தோறும் செய்தித்தாளைப் படிக் கக் கேட்டுக் கேட்டுச் சிவ காமிக்கு அரசியல் செய்திகளில் கூட சுவையும் ஈடுபாடும் வந்து விட்டது. "அந்த அமைச்சர் எங்கோ வெளிநாட்டுக்குப் போனார் என்று நேற்று போட்டி ருந்ததே இன்று என்ன போட் டிருக்கிறது?'' என்று அவளே கேட்கத் தொடங்கிவிட்டாள். என்றைக்கேனும் ஒருநாள் அலுத்துப்போன நிலையில்பெரிய சாமி இரவு செய்தித்தாளைப் படிக்கவில்லை என்றாலும் சிவ காமி அவரைச் சும்மா விடுவ தில்லை. அதைப் போலத்தான் அன்றும் "என்னவெட்டி முறித்து விட்டீர்கள் அலுத்துப்போக? கொஞ்சநேரம் அந்தத் தாளைப் படியுங்கள் கேட்கலாம்'' என்று அவரைத் தொந்தரவு செய்து படிக்க வைத்தாள்.

மா.கி. தசரதன் எம்.ஏ.

செய்தியோடு செய்தியாக ஒரு மூலையில்,

"கல்லூரி மாணவனின் பரி தாப மரணம்.
தன் தோழர்களுடன் இன்பப் பயணம் சென்ற கல்லூரி மாணவன் என்னூர் எனும் இடத்தில் கடலில் மூழ்கி மாண்ட பரிதாபம்.''

என்ற செய்தியும் படித்தார் பெரியசாமி. படித்துவிட்டு அடுத்த செய்தி என்ன என்று தாளின் மேலேயும் கீழேயும் தன் கண்களைச் செலுத்தினார்.

ஆனால் சிவகாமியால் அப்படி இருக்கமுடியவில்லை. அவள் வயிற்றில் ஏதோ செரிக்காத உணவு இருந்துகொண்டு துய ரம் தருவதைப்போல உணர்ந் தாள். கையோடு கையைப் பிசைந்துகொண்டாள். மீறிவந்த விக்கல்களை அடக்கிக்கொண் டாள்.

"உங்களைத்தானே....'' என்று திக்கித்திக்கி அழைத்தாள்.

"ஏன்...''

"......''

"சொல்லு. என்ன? ஏன் என்னமோபோல் இருக்கிறாய்?''

"வந்து....நாளைக்கு......பட்ட ணம் போய் வாருங்களேன். ஞானசம்பந்தனைப் பார்த்து விட்டு வாருங்கள்.''

சிவகாமி வேறு ஒன்றும் சொல்லவில்லை. ஆனால் பெரிய சாமி புரிந்துகொண்டார் சற்று முன் செய்தித்தாளில் தான் படித்த செய்தியின் விளைவு இது என்பதைத் தெரிந்துகொண் டார். தாய் மனத்தின் வேதனை யைப் புரிந்துகொண்டு,

"சரி ஆகட்டும். ஒன்றும் இல்லை வீணாக ஏன் கவலைப்படு கின்றாய்?'' என்று அவளுக்கு ஆறுதல் கூறிவிட்டார். ஆனால் அதற்குப் பிறகு அவருடைய மன திலேகூட அச் சம் எழுந்தது. ஒருவேளை அப் படி இருந்துவிட் டால் என்று நினைத்தபோது அவர் உடல் ஒருமுறை வியர்த் துப் போயிற்று. ஒன்றும் செய்ய அறியாதவராய் செய்தித்தாளை மடித்து ஒருபுறமாக வைத்து விட்டு "நாளை, முதல் பஸ் ஸிலேயே போகின்றேன். காலை யில் எழுப்பிவிடு'' என்று சொல்லிவிட்டு எழுந்துபோய் படுத்துக்கொண்டார்.

மாணவர் விடுதியின் மாடிப் படிகளை ஒவ்வொன்றாக மிதித்து நின்று மெல்ல ஏறி, தாழ்வாரத் துத் தூண்களின் ஓரமாகச் சென்று 79ம் எண்ணுள்ள அறையை அடைந்தபோது பெரியசாமியின் மனம் என்ன பாடுபட்டது என்பதைச் சொல் லில் வடிக்க இயலாது.

ஊரிலிருந்து தன் மகனைக் காண வேண்டும் என்ற ஆவலில் ஓடோடியும் வந்தவர் தன் மக னுடைய அறைக் கதவுகள் மூடி பூட்டப்பட்டிருந்ததைக் கண்ட வுடன் என்ன செய்வது என்று அறியாமல் திகைத்தார். எங்கா வது சற்றுத் தொலைவில் ஏதே னும் வேலையாகச் சென்றாலும் விடுதியில் அறையைப் பூட்டிக் கொண்டுதான் செல்லவேண் டும். விழிப்பாக இரு. எங்கே போவதானாலும் அறையைப் பூட்டிக்கொண்டு போ!-என்று பெரியசாமியே ஒருமுறை தன் மகனுக்கு அறிவுரை கூறியிருக் கின்றார். என்றாலும் தன்னுடைய ஆவலும் அச்சமும் கலந்திருந்த நேரத்தில் பூட்டியிருந்த கதவு அவரைப் பீதியும் குழப்பமும் அடையச்செய்தது. யாரையாவது ஏதாவது கேட்கலாம் என்பதற் கும் தயங்கினார். கேட்டால் "இதோ இங்கே...'' என்று ஏதா வது சொன்னால்தான் ஆயிற்று. அல்லாமல் ஏதேனும் கேட்டு மாளாத கெடுதலைச் சொன்னால் என்று எண்ணியபோதே பெரிய சாமியின் மனம் தடுமாறியது. என்ன செய்வது என்று தெரி யாமல் குழம்பி நின்றபோது ஞானசம்பந்தன் வருவதனைக் கண்டார்.

"அப்பா'' என்று அழைத்துக் கொண்டே நெருங்கினான். ஆனால் அந்தக் குரலைக் கேட்ட பெரியசாமியின் உள்ளம் மகிழ்ச்சியால் விரியவில்லை. எதிர் பார்த்து ஏங்கி நின்ற இன் குரலைச் செவிமடுத்தும் சிந்தை குளிரவில்லை. மகனின் தோற்றம் அவருக்கு மனவேதனையைத் தந்தது. இரண்டு மூன்று நாட் கள் நோயுற்று நலிந்து படுக்கை யில் கிடந்து எழுந்து தள்ளாடி நடப்பவன்போல அவனுடைய

நடையும் நொடியும் அமைந்திருந்தன. தலையெல்லாம் கலைந்து அலங்கோலமாக இருந்தது.

"என்ன சம்பந்தன் உடல் நலம் இல்லையா? என்னவோ போல் இருக்கின்றாயே?" என்று பெரியசாமி கேட்டார்.

"ஒன்றுமில்லை! பா, நன்றாகத்தான் இருக்கின்றேன். இன்னும் குளிக்கவில்லை. இப்போதுதான் எழுந்தேன்" என்று சொல்லிக்கொண்டே அறைக் கதவைத் திறந்து பெரியசாமியை உள்ளே அழைத்துக்கொண்டு போய் நாற்காலியில் உட்கார வைத்தான்.

அறையைச் சுற்றிப் பார்த்த பெரியசாமி அருவருப்படைந்தவர்போல காணப்பட்டார்.

மேஜைமேல் தாறுமாருகக் கிடந்த புத்தகக் குவியலைக் கண்டார்; இங்கும் அங்குமாகத் தொங்கிக்கிடந்த அழுக்குத் துணிகளைக் கண்டார்; தரையில் படிந்திருந்த தூசிப் படலத்தைக் கண்டார். இதையெல்லாம் கண்டதும் "என்ன சம்பந்தன் இப்படி வைத்திருக்கிறாய்?" என்று தன் மகனைக் கேட்டார். வாய் இந்த வினவைத் தொடுத்தது; ஆனல் மனமோ முன்னே மாத்தூரில் இருந்த ஞானசம்பந்தனை எண்ணிப் பார்த்தது. எப்பொழுதும் எதையும் நெறிபிறழாமல் செய்யும் பழக்கம்; தூசும் தும்பும் படிந்ததும் துடைத்துத் தூய்மைப்படுத்தும் பழக்கம், இவையெல்லாம் பெற்றிருந்த தன் மகன் அந்த மாத்தூர் மண்ணில் இருந்த இருப்பையும் இன்று சென்னையில் இருக்கும் இழிவையும் கண்ட பெரியசாமியின் மனம் துணுக்குற்றது. என்ன மாறுதல் என்று எண்ணினர். ஏன் இவ்வாறு மாறிவிட்டான்? என்று பெரியசாமி வருத்தப்பட்டுக்கொண்டிருந்தார்.

ஆனல் அந்த மகனே ஏதும் பேசாமல் அமைதியாக ஒரு மூலையில் நின்றுகொண்டு ஒரு நூலைப் புரட்டிக்கொண்டிருந்தான். பெரியசாமி என்னென்னவோ கேட்டார். எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டு, 'ஆமாம்' 'இல்லை' 'ஊம்' 'சரி' என்று ஏதாவது சின்ன சின்ன சொற்களில் பதில் சொல்லிக்கொண்டு நின்றான். 'ஏன் நிற்கின்றாய் உட்காருவதுதானே" என்று பெரியசாமி சொன்னார்.

"இருக்கட்டும்! பா" என்று நின்றுகொண்டே இருந்தான்.

மகனுடைய தோற்றமும் அறையின் அலங்கோலமும் ஞானசம்பந்தன் நடத்தையில் மாற்றம் இருக்கின்றது என்பதை உணர்த்தியது என்றாலும் தன் மகனைக் கண்டதில் பெரியசாமியின் மனதில் பெரிய மகிழ்ச்சி இருந்தது. முதலில் இருந்த அருவருப்புகூட பறந்துவிட்டது.

என்னூர்க் கடலில் யாரோ ஒரு மாணவன் மூழ்கிவிட்டான் என்று கேட்டு ஓடிவந்து ஞானசம்பந்தனைக் கண்டபோதே அவருக்குப் புதையல் எடுத்த மகிழ்ச்சியைக் கொடுத்தது.

மகிழ்ச்சியும் துக்கமும் இப்படித்தான் சில நேரங்களில் ஒன்றும் இல்லாமலே வரும், போகும். நாமாக ஒன்றை இப்படி ஆகும் அப்படி ஆகும் என்று என்னென்னவோ எண்ணிக்கொள்ளுவோம். நாம் எண்ணிய படி நடவாமல் எதிராக நடந்துவிட்டால் நடந்தது நல்லதானல் மனம் துள்ளிக்குதித்து ஏதோ செயற்கரிய பெருஞ் செயலைச் செய்துவிட்டதைப்போல எண்ணுகின்றோம்; கிடைத்தற்கரிய ஒன்று கிடைத்துவிட்டதைப் போல எண்ணுகின்றோம். எடுத்துச் சொல்ல இயலாத தன்மையில் மகிழ்ச்சியோ துன்பமோ ஒவ்வொருவருடைய மனதிலும் எப்போதேனும் ஒருமுறைவந்தே தீரும். "என்ன இன்று ஒரே கொண்டாட்டமாக இருக்கிறீர்களே?" என்று யாராவது கேட்டால் "இதனால்தான்" என்று காரணம் சொல்ல இயலாது;



என்னவோ போல் இருக்கின்றீர்களே என்ன தன்பம் சொல்லுங்கள் என்றாலும் சொல்ல இயலாதவாறு சில நேரங்கள் வாய்ப்பது உண்டு.

பெரியசாமி அப்போது அப்படித்தான் இரண்டையும் ஒரே கனத்தில் மாறி மாறி நுகர்ந்துகொண்டிருந்தார். தன் மகனை எதிரில் கண்டதில் பெரிய மகிழ்ச்சி; கண்ட மகன் 'கண்ட படி' இருந்ததில் துன்பம் இரண்டும் அவர் மனதில் இருந்தது.

ஞானசம்பந்தனிடம் எதைப் பற்றியெல்லாமோ கேட்கவேண்டும் என்று எண்ணிக்கொண்டு தான் ஊரிலிருந்து வந்தார். வழி நெடுகிலும் அதைப்பற்றியே அவருடைய சிந்தனை சுழன்று கொண்டிருந்தது. ஆனல் மகனைக் கண்டதும் அதையெல்லாம் மறந்துவிட்டார். மாணவர் விடுதியின் அறையில் உட்கார்ந்துகொண்டு நினைவுபடுத்தியும் பார்த்தார். ஆனல் எதுவும் தெளிவாக நினைவுக்கு வரவில்லை.

"குடிக்கத் தண்ணீர் இருக்கிறதா?" என்று கேட்டார்.

"இதோ' என்று சொல்லியவாறு ஞானசம்பந்தன் அறை வாயிலில் இருந்த சிறிய பானையைத் திறந்து பார்த்தான். எண்ணெய்ப் பிசுக்கு ஏறியதுபோல் அடியில் கொஞ்சம் தண்ணீர் இருந்தது. வேறு கொண்டுவரலாம் என்று கண்ணாடிக் குவளையை எடுத்துக்கொண்டு பக்கத்து அறைக்குப் போனான்.

ஏதோ எண்ணியவராகபெரியசாமி மேஜையின் அறையைத் திறந்தார். ஒருகணம்கூட அதன் உள்ளே என்ன இருக்கிறது என்று பார்க்கவில்லை: திடுக்கிட்டு அதை வேகமாக மூடிவிட்டார். நஞ்சு கக்கி நாசம் விளைக்கும் பாம்பு உள்ளே படம் எடுத்து ஆடிக்கொண்டிருக்கவில்லை; கொட்டவரும் தேள் கொடுக்கைத் தூக்கிக்கொண்டு அலைந்து கொண்டிருக்கவில்லை; மயக்கம் தரும் மருந்துப் பொட்டலமும் உள்ளே இருக்கவில்லை. ஆனல் பாடநூலகளும் எழுது கருவிகளும் இருக்கும் என்று எதிர்பார்த்து அந்த அறையை ஆவலுடன் இழுத்து பார்த்த தந்தையின் கண்களில் சிகரெட் கூடும் தீப்பெட்டியும் பட்டன. புகைப்பது பொல்லாத வழக்கமன்று என்று வாதிட்டாலும், பெற்ற மகன் அந்தப் பெருவழியில் அடி எடுத்து வைத்துவிட்டான் என்பதைக் கண்டதும் பேதை நெஞ்சம் அலமந்தது, அல்லற்பட்டது. ஒருவேளை யாராவது நண்பர்களுடையதாக இருக்கலாம் என்று ஒருகணம் எண்ணினர் பெரியசாமி. ஆனல் மறுபடியும் அந்த அறையின் மூலைகளில் தாறுமாருகச் சிந்திக் கிடந்த சிகரெட் துண்டுகள் அவர் மனதை வருத்தின. இருந்தாலும் இதைப் பற்றி அவனிடம் எப்படிக் கேட்பது, என்ன வென்று கேட்பது என்று அறியாதவராய்த் திகைத்தார். உடனே கண்டித்துக் கேட்டாலும் பயன் விளையாது என்பதனை உணர்ந்தார். தோளுக்கு மேலே வளர்ந்த பிள்ளை இனி தோழனாக இருக்கவேண்டும் பக்குவத்தைக் கெடுத்துக் கொள்ளக் கூடாது என்று எண்ணி மனம் புழுங்கினர்.

பக்கத்து அறையிலிருந்து தண்ணீருடன் வந்த ஞானசம்பந்தன் 'இந்தாருங்கள் அப்பா' என்ற போதுதான் நினைவு திரும்பிய

சற்றுநேரம் அங்கே தந்தையும் மகனும் ஏதும் பேசாமல் ஒருவரை ஒருவர் ஓரக்கண்களால் பார்த்துக்கொண்டிருந்தனர்.

இந்த நேரத்தில் இவர் எங்கு வந்தார் என்று ஞானசம்பந்தன் மனதில் எண்ணத் தொடங்கினன். சிக்கிரம் போகமாட்டாரா என்று நினைத்தான். தனக்கும் தன் தந்தைக்கும் இடையிலே ஏதோ பெருவெளி ஒன்று இருப்பதைப் போலவும் அந்த பெருவெளியின் இக்கரையில் தானும் மறுகரையில் தன் தந்தையும் இருப்பதாக உணர்ந்தான்.

முதன் முதலாக அவன் மனதில் தன்னுடைய தந்தையின் மீது பகைமை உணர்ச்சி தோன்றியது.

மறுபடியும் பெரியசாமியே பேச்சைத் துவங்கினர்.

"கல்லூரிக்குப் போகவில்லையா?" என்று கேட்டார்.

"இல்லை! பா...வந்து...முதல் மணிநேரம் ஆசிரியர் வரவில்லை அதனல்..." என்று ஞானசம்பந்தன் இழுத்தான்.

"இருந்தால் என்ன. ஒரு வழக்கத்தை ஏற்படுத்திக்கொண்டு அதன்படி நீ தயாராக இருக்கவேண்டாமா?" என்று கண்டிப்பதுபோல் சொல்லி தன் மகனுடைய முகத்தைக் கூர்ந்து பார்த்தார். அந்த முகத்தில் சுருக்கங்கள் தெரிந்தன. மகன் வேதனைப்படுகின்றது என்பதைப் புரிந்துகொண்டார். இது தான் நல்ல நேரம் சொல்ல வேண்டியதையெல்லாம்சொல்லி விடலாம் என்று பெரியசாமி எண்ணினர்.

காலம் நோக்கிச் செய்வது தனித்தன்மை எப்போதும் இருக்கின்றது. பக்குவம் வரும் வரையில் காத்திருந்து பெற வேண்டிய பலனைப் பெறுவது தான் முறை. கையிலே விதை கிடைத்தது என்று நினைத்த பொழுது ஏரைப் பூட்டி எருதுகளை ஓட்டிக்கொண்டு காடும் மேடும் கடந்து வயலுக்குச் சென்று விதைகளைத் தூவி வாய்க்கால் வெட்டி மதகு திறந்து நீர்பாய்ச்சிவிட்டு விட்டு விடுவதில்லை. அப்படிச் செய்தால் பலன் இருக்காது என்பது உழவர்களுக்குத் தெரியும். பெரியசாமி வயலில், பக்குவமும் பருவமும் பார்த்து வித்துகளைத் தூவி விவசாயம் செய்வதைப் போல் மகனுடைய மனக்கழனியில் அறிவுரை விதைகளைத் தூவி நல்வாழ்க்கை விவசாயம் செய்வதற்கும் அவன் மனம் கனியும் நேரம் பார்த்தார்.

தொடரு

— 2ம் பக்கத் தொடர்ச்சி —

...என்று கூறிக்கொண்டே, எட்டி நின்ற அவளைப் பிடித்திழுத்து, தன் மார்போடு சேர்த்தணைத்துக் கொண்டு, வெறியெல்லாம் உதட்டில் தேக்கி அதை வெளி யிடப்போகும் சமயம், எப்படியோ திமிறி, தப்பித்துக்கொண்ட வேலாயி, பளார், பளார் என்று அவன் கன்னத்தில் தன் கை வரிசையைக் காட்டிவிட்டு, கரும்பு நறுக்க வைத்திருக்கும் கத்தியைக் கையில் எடுத்துக் கொண்டு, "போறயா, அல்லது கூச்சல் போட்டு ஜனங்களை கூப்பிடட்டுமா, கிட்டே நெருங்கினே, ஆமா...அப்புறம் நான் பேசமாட்டேன்......இந்த கத்தி தான் பேசும்....,ஜாக்கிரதை..... ஹும்...ஒன் உசுரு மேலே ஆசையிருந்தா ஒடனே இந்த இடத்தைவிட்டு போயிடு-ஹும்" என்று குமுறினாள். - சாம்பலை நீக்கி விட்டு, ஊதிப் பெருக்கிய கனற் கங்குகளாகத் தெரிந்தன அவள் கண்கள்.

...பார்த்தான் கண்ணன். நிலைமை மோசமாகிவிட்டது. எதற்கும் துணிந்தவள் வேலாயி என்பது அவனுக்குத் தெரியும். கூச்சல் போட்டாலும் ஆபத்து, குத்திவிட்டாலும் ஆபத்து. யோசித்தான். அப்பொழுதுதான் இதை அவள் எஜமானனிடம் சொல்லிவிட்டால் என்ன செய்வது என்று எண்ணினான். எனவே அவளைச் சமாதானப் படுத்தும் நோக்கத்துடன் "வேலாயி! ஏதோ மூர்க்கத்தனமா தெரியாம செஞ்சிட்டேன் மன்னுச்சுக்கோ...தயவு செஞ்சு இந்த விஷயத்தை ஐயா கிட்ட மாத்திரம் சொல்லிடாதே...உன் கப்பு தண்டாவுக்கு நான் இனிமே சத்தியமா வரலே... என்னை நம்பு" என்றான் கெஞ்சும் தோரணையில்.

"உம்...உம்...உனக்கா புத்தி இருந்தா சரி...இந்த வெட்கக் கேட்டை ஐயாகிட்டே வேறு சொல்லணுமா... போ... போ" என்று கூறி அவனை அனுப்பி விட்டு, கதவை இறுக்கமாக சாத்திவிட்டு, வழக்கமாகவே போடாத தாழ்ப்பாளை அன்று போட்டுவிட்டு, உள்ளே வந்து படுத்துக்கொண்டாள். தூக்கம் வருமா? அவள் இமைகள் மூடவேயில்லை அன்று இரவு முழுவதும்.

மறுநாள் முன் இரவிலேயே 'சோ'வென்று மழை பெய்ய ஆரம்பித்துவிட்டது. கூடசேர்ந்து அடித்த காற்று, அவளது ஓலைக் கீற்றுக் குடிலின் தாழ்ப்பாளை வேறு பெயர்த்துவிட்டது. ஒரு கல்லை எடுத்து பக்க பலமாக வைத்துவிட்டு படுத்துவிட்டாள் வேலாயி. இதே சமயத்தில் அம்பலவாணரின் வீட்டுக் கூடத்தில் படுத்துக்கொண்டிருந்த கண்ணன் தூங்கவேயில்லை. 'பழிக்குப் பழி...என் கன்னத்திலே அறை...அதற்குப்பதில் — அவள் வாழ்விலே கறை...பார்த்துவிடுவோம் இன்று" என்று அவன் உள்ளம் குமுறிக்கொண்டிருந்தது. கூதல் காற்று அவன் காம வெறிக்கு விசிறியாக அமைந்தது. மலரின் மணமும், மழை சேர்ந்த குளிரும்தானே இயற்கையாகவே மோக வெறியைத் தூண்டிவிடுகின்றன! கண்ணனுக்குத் தெரியும், என்னதான் முயன்றாலும் இரவு இரண்டு மணிக்குமேல் யாரும் விழித்துக் கொண்டிருக்க முடியாதென்று.

அவன் எதிர்பார்த்தது போலவே, முதல் நாள் இரவு தூக்கமின்மையும், பகல் வேலை செய்த களைப்பும், வேலாயியைச் சொக்க வைத்துவிட்டன!

எழுந்து, ஒன்றுக்கு இரண்டாக பீடிகளை முடித்துவிட்டு, ஒருமுறை சுதாரித்துக்கொண்டு புறப்பட்டான் கண்ணன். தனக்கு வரப்போகும் ஆபத்தை அறியாமல், பாவை, பாவம் ஆழ்ந்த தூக்கத்திலிருந்தாள். அருகில் நெருங்கியவன் முதற் காரியமாக அவள் ஏதாவது கூச்சல் போட்டுவிடக்கூடாதே என்பதற்காக வாயை துணியால் இறுகக் கட்டிவிட்டான். விழித்துவிட்டாள் பேதை. விபரீத நிலைமையை உணர்ந்தாள். என்ன செய்யமுடியும். கயற்றினால் தன் கைகளை அவன் கட்டிவிட முயற்சிப்பதை தடுத்து, இடங்கொடுக்காமல் எவ்வளவோ திமிறினாள். முரட்டுப் பிடியில் சிக்கிவிட்ட அப்பெண்மான், அந்த இருட்டு வேளையில் அச்சின்னஞ்சிறு குடிலில் அங்குமிங்கும் ஓட முயன்றது. முடியவில்லை. சீற முடியவில்லை...பாய முடியவில்லை. அந்த அளவுக்கு வேடன் கண்ணப்பன் கண்ணி வைத்துப் பிடித்துவிட்டான்!

"வேலாயி! அழகாக கையில் வைத்து முகர வேண்டிய உன்னை இப்படி கசக்க வேண்டியதிருக்கிறதே என்று கவலைப் படவில்லை நான். அத்தர் தயாரிப்பதற்கு மலர்களை கசக்கித்தான் பிழிகிறார்களாம். கேள்விப்பட்டிருக்கிறேன். இன்னையிலிருந்து உன் திமிர் அடங்கட்டும். என்ன வந்தாலும் எனக்குக் கவலையில்லை" என்று சொல்லி அருகில் நெருங்கினான். அவனுக்குத் தைரியம் — இரையாகிவிட்டோம் என்று எவரிடமும் வாய்விட்டுக் கூறுமளவுக்கு அவள் பெண்மை இடங்கொடுக்காது என்று!

அவன் அக்குடிசையை விட்டு வெளி வரும்பொழுது வேலாயி, முத்தெடுக்கப்பட்ட நத்தையாக, சத்தெடுக்கப்பட்ட சக்கையாக, கசங்கிய மலராக, கசந்த கரும்பாக, திரிந்த பாலாக, எரிந்த விறகாக மயக்கமுற்றுக் கிடந்தாள் உள்ளே!

பொழுது புலரும் நேரம். உடம்பு வலியையும் பொருட்படுத்தாது வழக்கம்போல் வேலைக்குப் புறப்பட்டாள் அவள். நேராகவே அம்பலவாணரை அணுகி. தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்துவிட்டாள். அவருக்கு ஒன்றும் புரியவில்லை. ஒரே ஆச்சரியம், கண்ணீர் என்றால் எதற்கு வரும் என்று கேட்கக்கூடிய வேலாயியா இது என்று!

"என்னம்மா சங்கதி? சொல்லு...ஏதா இருந்தாலும் பரவாயில்லை...நான் சரி பண்றேன்" என்று சமாதானம் செய்தார்.

"ஐயா! என்னன்னு சொல்வேன்....கண்ணன்....அவன்.... என்னை.. கெடு...கெடுத்துட்டானுங்க" என்று விக்கி விக்கி சொல்லி முடித்தாள்.

பிறகு அம்பலவாணர் முழு விபரத்தையும் கேட்டுத்தெரிந்து கொண்டார். அவருக்கு ஒருவாறு விஷயம் விளங்கிற்று. பாவம், இருவரும் சூழ்நிலைக்கு பலியாகிவிட்டார்கள் என்றே முடிவுசெய்து நடந்தது நடந்து விட்டது. எப்படியும் இருவரையும் மாங்கல்யத்தில் ஒன்று சேர்த்துவிடலாம் என்று முடிவெடுத்தார். இந்தபோதிலும் ஏதாவது அவளைக் கிண்ட வேண்டும் என்ற எண்ணத்தில் "ஏம்மா, அவன் கெடுத்தான்னு தப்பை அவன் மேலே போட்டுட்டு தப்பிக்கப் பாக்கிறயே. உன் சம்மதம் இல்லாம எப்படியம்மா அவன் உன்னை கெடுக்க முடியும்..." என்று கேட்டார்.

"இல்லே ஐயா, சத்தியமா சொல்றேன். நான் கொஞ்சங்கூட இடங்கொடுக்கல. அவன் தான் பலவந்தமா என்னை கட்டிப் போட்டுட்டு ஆசையை தீத்துக்கிட்டான். நான் என்னங்க சின்னப் பொண்ணுதானே அந்த முரடன் முன்னாலே எம்மா நேரம் என் பலத்தை காட்ட முடியும்" என்று அழுதாள்.

★

நண்பா! உன்னைப்போலத் தான் அவராலகூட நம்பமுடியவில்லை. இரு வாலிப உள்ளங்கள். நெருங்கிப்பழகின. பள்ளத்தில் விழுந்துவிட்டன. எங்கே கரம் பிடிக்காமல் போய்விடுவானோ என்ற இயற்கைப் பயத்தினால்தான் குற்றத்தை கண்ணன்மீது போடுகிறாள் என்றே தீர்மானித்தார் அம்பலவாணர். எப்படியும் அவள் குற்றத்தை அவளே உணரவைக்க வேண்டும் என்று விரும்பிய அம்பலவாணர், "வேலாயி! போய் ஒரு ஊசியும், நூலும் கொண்டு வா," என்று கட்டளையிட்டார்.

நூல் ஊசி இரண்டோடும் அவள் திரும்பியபோது. "இதோ பார், இந்த நூலை நீ வைத்துக்கொள். நான் இந்த ஊசியை வைத்துக் கொள்கிறேன். இந்த ஊசியின் காது வழியாக நீ நூலை கோர்த்து விட்டாயானால் நீ சொல்லுவதை நான் நம்புகின்றேன்" என்றார்.

இவ்வளவுதானே என்று நினைத்த வேலாயி, நூலை வாங்கிக்கொண்டு, பணியில் ஈடுபட்டாள். ஆனால் ஒவ்வொரு தடவை அவள் முனையும்பொழுதும் சிறிது நகர்த்திவிடுவார் ஊசியை. இப்படியே சில வினாடிகள் கழிந்தன. வேலாயியால் ஒன்றும் செய்யமுடியவில்லை. "ஊசியை அசச்சுகிட்டே இருந்தீங்கன்னு எப்படி எசமான் இதைப் போடமுடியும்" என்று சிணுங்கினாள் வேலாயி "ஆ! வந்தாயா வழிக்கு, அதேபோலத் தான்-கோபித்துக்கொள்ளாதே, நீயும் விட்டுக்கொடுக்காம இருந்தீன்னு, அவன் எப்படி உன்னை கெடுத்திருக்கமுடியும்" என்று கேட்டுவிட்டு சிரித்தார்.

புது முகவரி:
க. அறிவழகன்,
167, திருவொற்றியூர் நெடுஞ்சாலை,
சென்னை-21.

நிலைமையை புரிந்துகொண்டு, ஏதோ ஒரு அசட்டுத் தைரியத்துடன் 'சரிய்யா!...மறுபடியும் ஊசியைப் பிடியுங்கள் நான் எப்படியும் இந்த முறை நூலைப் போட்டுவிடுகிறேன்.' என்று மறுபடியும் தீவிரமாக முனைந்தாள். தோல்வியைக் கண்டு சளைக்கவில்லை. மீண்டும் மீண்டும் முயற்சித்தாள்.

அம்பலவாணரும் வயது முதிர்ந்தவர்தானே. எவ்வளவு நேரம் கையில் ஊசியைப் பிடித்திருக்கமுடியும். வலிக்க ஆரம்பித்தது. கூர்மையாகக் கவனிப்பதால் பார்வையும் மங்கி மங்கி எழுந்தது. கொஞ்சம் தவறிவிட்டார். அந்த நேரத்திற்காகக் காத்திருந்த வேலாயி வெற்றி பெற்றாள்!

"இப்போ என்ன சொல்றீங்கய்யா" என்றாள் வெற்றிக் களிப்பு முகத்திலே புரண்டோட..

"ஆமா! என் கை ஓஞ்சிப் போச்சு. அதனால்தானே முடிந்தது" என்றார்.

"ஆமா எசமான்! அதே போலத்தான் என் விசயமும். நான் சோர்ந்துவிட்டபோதுதான் சொந்த வெறியையும் தணித்துக் கொண்டான் அவன்" என்று முடித்து மீண்டும் பொல பொலவென்று கண்ணீர் வடிக்க ஆரம்பித்தாள்.

தன்னுடைய சோதனையிலேயே தன்னை வென்று, உண்மையை நிலைநாட்டிய அவளது விடா முயற்சியை வியந்துகொண்டே 'கண்ணா' என்று இரைந்தார் அம்பலவாணர்.

அவன் வந்தவுடன் இப்போ 'என்னமா செய்யச் சொல்றே அவனை" என்று கேட்டார்.

"என்னங்க செய்றது. பணத்தையோ, புடவையோ திருடிக் கிட்டா, திருப்பிக்கொடுன்னு சொல்லலாம். என் மானத்தையே திருடிக்கிட்டாரே, எப்படிங்க திருப்பித்தர முடியும்"- அவள் தேம்பல் நிற்கவில்லை.

"அவனையே உனக்கு தந்துட்றேன். அப்போ" என்று விவகாரத்துக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தார் அம்பலவாணர்.

★

"இப்போ என்னடா சொல்றே! வாதத்தை வாபஸ் வாங்கிக் கொள்றயா" என்றான் ஜனா.

"அதெல்லாம் சரி. இது உன் கொள்கைக்காகப் புனையப்பட்ட கற்பனையா, அல்லது நிசமாகவே நடந்ததா...ஏன் கேட்கிறேன்னா இந்த மாதிரி நம்ம நாட்டிலே நடக்குமாங்கிறது சந்தேகமா இருக்கே" என்று நீட்டினேன்.

"உண்மைதான். பிரெஞ்சு எழுத்தாளன் பல்சாக் சமைத்த எழுத்தோவியத்திற்குத்தான் தமிழ் மூலாம் பூசினேன்" என்று சிரித்தான் அவன். ★

— 1ம் பக்கத் தொடர்ச்சி —

ஆசிரியர் கண்ணதாசனும் நானும் தாம்பரம் தி. மு. க. பொதுக்கூட்டத்தை முடித்துக்கொண்டு ஒரு வாடகைக் காரில் வந்தோம். அப்போது அந்த டாக்சி டிரைவர், 'சென்னையின் 'டாக்சி டிரைவர்'களது பரிதாபத்திற்குரிய வாழ்க்கையை எடுத்துச் சொன்னார். கேட்பதற்குச் சுவையாக இருந்தாலும், எண்ணிப் பார்ப்பதற்கு இயலாத வகையில் சோகமாகத் தானிருந்தது. அவர் சொன்னதை இங்கே கட்டுரை வடிவில் தந்திருக்கிறேன். சென்னையின் 'இரவு வாழ்க்கை'யைத் தெரிந்துகொள்ள இந்தச் சிறு கட்டுரை பயன்படும்.

—தென்னரசு.

என்னைப்போல்தான் ரிக்ஷாக்காரர்கள், போலீஸ்காரர்கள் சம்பாதிக்கிறார்கள். அவர்கள் படுகின்ற கஷ்டம் எங்களுக்கும் தெரிகிறது. நாங்கள் படும் அவதி அவர்களுக்கும் தெரிகிறது. ஆனால் ஏனோ தெரியவில்லை, எங்களுக்குள் ஒற்றுமையைப் பார்க்க முடியவில்லை. நகரத்தில் எந்த விதமான சில்லரைச் சச்சரவுகள் நடந்தாலும் போலீஸ்காரர்கள் கருத்தில் ரிக்ஷாக்காரர்களும், டாக்சி காரர்களும்தான் படுகிறார்கள். இந்த அக்ரமம் என்றைக்கு ஒழிகிறதோ தெரியவில்லை. உங்களுக்குத் தெரியும், இந்த சென்னை நகரத்திலே எத்தனை வழக்குகளில் எங்களைப்போன்றவர்களைச் சேர்த்திருந்தார்கள். ஒரு சிலர் சேர்ந்திருக்கலாம்— அதை நான் இல்லையென்று சொல்லவில்லை. அதற்காக டாக்சிகாரர்களை 'குற்ற பரம்பரை' ஆக்கிவிடுவதா?

எங்களை வதைக்கும் வறுமை பற்றிக்கூட எங்களுக்குக் கவலையில்லை. எங்களையுமறியாமல் எங்கள் மீது சுமத்தப்படும் குற்றங்களை நினைக்கும்போது எங்களுக்கு பெருத்த அவமானமாக இருக்கிறது.

அரசாங்கத்தார் மதுவை ஒழித்துவிட்டதாகக் கூறுகிறார்கள். சட்டம் என்னவோ அமலில் இருக்கத்தான் செய்கிறது. குடித்துப் பழக்கப்பட்டவர்கள் குடித்துக்கொண்டு தானிருக்கிறார்கள்.

மாலை நேரங்களில் வண்டியில் ஆளில்லாமல் போனால் யாராவது கைதட்டி வண்டியை நிறுத்துகிறார்கள். ஏறிக்கொள்கிறார்கள். அவர்கள் சொல்லும் திக்குகளிலெல்லாம் வண்டி திரும்புகிறது. இருட்டு வரும் வரை வண்டி ஓடிக்கொண்டே இருக்கிறது. இருட்டிய பிறகு வண்டியைக் குறிப்பிட்ட இடத்தில் நிறுத்துகிறார்கள். இறங்கிப் போய்விட்டு, பதினைந்து நிமிடங்கள் சென்ற பிறகு மறுபடியும் வந்து வண்டியில் ஏறுகிறார்கள். அப்போது அவர்கள் கையில் புட்டி புட்டியாய் கள்ளோ, சாராயமோ இருக்கிறது. 'ஐயா, இதெல்லாம் சட்ட விரோதமாயிற்றே'' என்றால் அவர்கள் கேட்க மறுக்கிறார்கள். மீறினால் இடுப்பில் வைத்திருக்கிற பிச்சுவாவைக் காட்டுகிறார்கள். ஏழைக் காரோட்டிகள் என்ன செய்வார்கள்! அவர்களை நம்பி எத்தனையோ 'ஜீவன்'கள்! தர்மத்திற்குப் பயந்தால் அந்த இடத்தில் அவர்களிடத்தில் குத்துப்பட்டுச் சாகவேண்டியதுதான்.

சரி – ஏற்றிக்கொண்டு வருகிறோம். வழியில் போலீஸ்காரர்கள் வண்டியை மறித்துப் பரிசோதித்தால், 'காருண்ய'மிகுந்த போலீசார் எங்களையும் குற்றவாளியாக்கிவிடுகிறார்கள். மறுத்துப் பேச முடியவில்லை. எங்களுக்குச் சாட்சி இருந்தால் தானே!

இப்படித்தான் நான் ஒரு சிக்கலான வழக்கில் சிக்கிக் கொண்டேன்.

இரவு மணி பதினொன்று இருக்கும். அப்போது நகரில் ஒரு புதிய படம் வெளிவந்திருந்தது. ஏராளமான பேர் படம் பார்த்துவிட்டுத் திரும்பிக்கொண்டிருந்தார்கள். நான் தியாகராய நகரிலிருந்து திரும்பிக்கொண்டிருந்தேன். ஸ்பென்சர் கம்பெனிக்குப் பக்கத்தில் வரும்போது ஒருவர் வண்டியை நிறுத்தினார். அவருக்குப் பக்கத்தில் ஒரு இளம்பெண் தலையிலே பூச்சூடி, பட்டுப்புடவை யுடுத்திநின்றாள். பார்வைக்குப் புதுமணத் தம்பதிகள்போல் தோன்றினார்கள். இருவரும் காரில் ஏறிக்கொண்டார்கள். வண்டி கிளம்பியது; மீட்டர் ஓடிக்கொண்டிருந்தது.

எங்கெங்கோ சுற்றி - அவர் சொன்ன பக்கமெல்லாம் போய் நுங்கம்பாக்கத்துக்கு அருகில் வந்துவிட்டேன். "இன்னும் எவ்வளவு தூரம் போகவேண்டும்" என்று கேட்டேன்.

''அவ்வளவுதான், இன்னும் கொஞ்ச தூரம்தான்'' என்றார்.

அவர் சொல்லிமுடித்த மறுகணமே வண்டி பெட்ரோல் இல்லாமல் நின்றுவிட்டது.

நல்ல இருட்டு! கையில் ஒரு பெட்ரோல் புட்டியை எடுத்துக்கொண்டு பக்கத்தில் இருந்த பெட்ரோல் கிடங்கு (பங்க்)க்கு நடக்க ஆரம்பித்தேன். எதிரே இரண்டு போலீஸ்காரர்கள் வந்துகொண்டிருந்தார்கள்.

''ஏய் டிரைவர்!'' என்று அதிகாரத்தோடு கூப்பிட்டார்கள்.

நடுக்கத்தோடு அப்படியே நின்றுவிட்டேன்.

''வண்டியில் யார் இருப்பது?'' என்று கேட்டார்கள்.

''யாரோ புதுமணத் தம்பதிகள்''–என்றேன்.

கைவிளக்கில் உதவியால் வண்டிக்குள் இருந்த அவர்களின் முகத்தைப் பார்த்தார்கள். பார்த்ததும் போலீஸ்காரர்களில் ஒருவர், ''ஓஹோ நீயா? உனக்கு எத்தனை முறை சொன்னாலும் புத்தி வரல்லியே! நீயும் பெண்தானா?'' என்றார்.

எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. நானே என் தலையில் அடித்துக்கொண்டு கார் மறைவில் போய் நின்றேன்.

''ஏய் டிரைவர் வண்டியை எடு!''-என்றார் போலீஸ்காரர்.

''வண்டியில் பெட்ரோல் இல்லையே''-என்று பணிவோடு சொன்னேன்.

அவ்வளவுதான் வழக்குப் பதிவாயிற்று. அந்த வழக்கில் நானும் குற்றவாளியாக்கப்பட்டேன். அவள் ஒரு 'இரவு ராணி'யாம்! இவர் 'இரவுராணி,' இவன் 'பகல் ராஜா' என்று நாங்கள் எப்படி அடையாளம் தெரிந்து கொள்வது!

வண்டியில் ஏற வரும் பெண்களைப் பார்த்து 'நீங்கள் இரவு ராணியா?'-என்று கேட்கலாமா? கேட்டால்தான் சும்மாவிடுவார்களா? அவள் இரவு ராணியாக இருந்தால்கூட பல்லை உடைக்க வருவாளே!

இதெல்லாம் யாருக்குத் தெரிகிறது. சொன்னால் டாக்சிக்காரன் பொல்லாதவன் என்கிறார்கள். என்று கூறி அவர் என் முகத்தைப் பார்த்தார். எனக்கும் பரிதாபமாகத்தான் இருந்தது.

அவர் மேலும் தொடர்ந்தார்: போலீஸ்காரர்கள்தான் அப்படியென்றால் பொதுமக்களாவது எங்கள்மீது மனப்பூர்வமாக அன்புகாட்டுகிறார்களா என்றால், இல்லை. சிலர் இப்போது புது மாதிரியாக ஏமாற்ற ஆரம்பித்திருக்கிறார்கள்.

விலையுயர்ந்த ஆடை அணிந்திருக்கிறார்கள். பார்த்தால் பெரிய இடத்துச் செல்லப் பிள்ளைகளைப்போல் தெரிகிறார்கள். அவர்களை எப்படி நம்பாமல் இருப்பது! வண்டியை நிறுத்தி ஏறுகிறார்கள். எங்காவது ஒரு இடத்தில் நிறுத்திவிட்டுப் போகிறார்கள். "இதோ கொஞ்ச நேரத்தில் வந்துவிடுகிறேன்'' என்று சொல்லிவிட்டுப் போகிறார்கள். அவ்வளவுதான்! போனவர் போனவர்தான். திரும்புவதில்லை. சென்னையில் இது அதிகமாக இருக்கிறது. நாங்கள் கண்களைத் துடைத்துக்கொண்டு அந்த இடத்தைவிட்டுக் கிளம்ப வேண்டியதுதான். வண்டியில் ஏறும்போதே 'கையிலே, மடியிலே துட்டு இருக்குதா?' என்று கேட்கலாமா? அது முறையா?

–இதுமாதிரி எத்தனையோ தொல்லைகள். டாக்சி ஆட்டோ ரிக்ஷா-ரிக்ஷா- இவர்களிடையே ஒற்றுமை இல்லை. அந்த வேற்றுமையை ஒரு சிலர் பயன்படுத்திக்கொள்கிறார்கள். கூட்டுறவும் ஒத்துழைப்பும் இல்லாமல் எந்தக் காரியம் உருப்பட்டிருக்கிறது. இல்லையே!''

காரோட்டி ஒரு பிரசங்கத்தையே செய்துமுடித்துவிட்டார். அவர் பேச்சில் உண்மை இருந்தது.

★

உலகத்தில் வெகுபேர் பரபரப்பாகவே வாழ்க்கையை நடத்துகிறார்கள். படபடவென்று பேசுகிறார்கள். அவர்கள் பேச்சு எப்போதும் அனலாகவே இருக்கிறது. டாக்சிக்காரர்கள் அந்த வகையைச் சார்ந்தவர்கள்தான். கார் பிரயாணம் சூடு நிறைந்தது என்பார்கள். அவர்கள் எந்த நேரமும் காரிலேயே சுற்றிக்கொண்டிருப்பதால் அவர்களின் குணம் மாறிவிட்டிருக்கிறதோ! பாவம் டாக்சிக்காரர்கள்! பாவம் ரிக்ஷாகாரர்கள்! பாவம் போலீஸ்காரர்கள்!

விஞ்ஞானத்தில் உப்பு வாயுச் சுழற்சி என்று ஒரு பகுதி உண்டு. பட்டுப்போன செடிகளின் உப்புவாயு, துளிர் விடும் புதிய செடிகளின் வளர்ச்சிக்குப் பயன்படுகிறது. கொஞ்சகாலன் கழித்து அது மடிகிறது. புதிய செடி உருவாகிறது. செடி, செடியைத் தின்று வளர்கிறது. அது போல மனித ஜாதியில், போலீஸ்காரர்கள்-பொதுமக்கள் - டாக்சிகாரர்கள். ★

'சின்னபுத்தி' மீனாட்சிசுந்தரம்!

கண்ணதாசன்

"படித்து விட்டால் மட்டும் போதாது. பண்பு மிகவும் அவசியம்"-என்று சொல்வார்கள். படிப்புவேறு பண்பு; வேறு என்று நான் சிந்தித்துப் பார்ப்பேன். முடிவு தெரிவதில்லை. படிப்பு என்பது உலகியலைத் தெரிந்து கொள்வது, பண்பு என்பது நடத்தையில் செம்மை பெறுவது. உலகியலைத் தெரிந்துகொண்டால் நடத்தையில் செம்மை தானாக வந்துவிடுமே! படிப்போடு பண்பும் ஊறி வந்துவிடுமே! எப்படி இரண்டும் வேறு வேறாக இருக்கமுடியும்? இந்தக் கேள்விகளே என் முடிவறியா நிலைக்குக் காரணம்.

ஆனால் சமீபத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சியிலிருந்து ஒரு நல்ல முடிவுக்கு நான் வந்துவிட்டேன். உண்மையில் படிப்பு வேறு பண்பு வேறு என்பதுதான் அது. படித்தவர்கள் எல்லோருமே பண்போடு இருப்பதில்லை. சிலர் தான் அந்தச் செம்மை நிலைக்குத் தங்களை ஆளாக்கிக் கொள்கிறார்கள்.

தமிழ் புலவர்களைப் பொறுத்த வரையில், **பன்மொழிப்புலவர் அப்பாதுரையார், டாக்டர் ராசமாணிக்கனார்** முதலியவர்களோடு நான் நெருங்கிப் பழகியிருக்கிறேன். **டாக்டர் மு. வரதராசனார், பேராசிரியர் அ. மு. பரமசிவானந்தம், அன்புகணபதி, அ. கி. பரந்தாமனார், மொழியியல் வல்லுனர் ஞா. தேவநேயப் பாவாணர், ஔவை துரைசாமி, பேராசிரியர் மயிலை சிவமுத்து**- மற்றும் சில பெரும் புலவர்களைப் பற்றி கேள்விப்பட்டிருக்கிறேன்; குறைந்த அளவு பழகியிருக்கிறேன். இவர்களெல்லாம் "படிப்பும் பண்பும் ஒன்று" என்று மெய்ப்பித்தவர்கள். யாரிடத்தும் கோபதாபங்கள் இருந்தாலும், அதை நளினமாகவும், நயமாகவும் மட்டுமே காட்டக்கூடியவர்கள். "நீர்கிழிய எய்த வடுப்போல்" சினத்தை மாற்றிக் கொள்ளும் சீரொழுகுசான்றோர்கள். கொள்கை அளவில் இவர்களில் பலர் நம்மோடு பெருத்த மாறுபாடு கொண்டவர்கள். என்றாலும் நம்மிடமிருந்து அவர்கள் மாறுபடுவதை மிகுந்த எச்சரிக்கையோடு காட்டிக்கொண்டுவருகிறார்கள். மாறுபாடு கொள்கை அளவில்தான் என்பதை மனதில் கொண்டு, நம்மைக் காணுமிடங்களில் அன்போடு பழகி வருகிறார்கள். இதைத்தான் பண்பு என்று நான் கருதுகிறேன். கொள்கையில் மாறுபட்ட ஆட்களையே தொலைத்துவிடுவேன் என்று உறுமுவது, அறிவுடையோர்க்கு அழகாகாது. அவர்கள் எவ்வளவுதான் படித்திருந்தாலும் அவர்களைப் 'படித்த ....ள்கள்' என்றுதான் மக்கள் அழைப்பார்கள்.

அந்த ரகத்தைச் சேர்ந்தவர் தான், படிப்பு வேறு பண்பு வேறு என்ற கொள்கையை உறுதிப்படுத்தியவர். அவரை '**பன்மொழிப்புலவர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார்**' என்று அழைக்கிறார்கள். எவ்வெவ் மொழிகளில் அவர் புலவர் என்பது தென்றல் வாசகர்களுக்குத் தெரியாவிட்டாலும், பட்டம் என்னவோ பன்மொழிப் புலவர் என்றுதான் இருக்கிறது! ஒரு மொழி படித்த புலவர்களே செய்யத் துணியாத பண்பிழந்த செயல்களை, பல மொழி படித்த இவர் துணிந்து செய்துவிடுகிறார்.

ஒரு வாரத்துக்கு முன்னால் சென்னை மாநிலக் கல்லூரியில் பேசுவதற்கு மாநிலக் கல்லூரி மாணவர் தமிழ்ப் பேரவை; **அறிஞர் அண்ணா** அவர்களை அழைத்திருந்தது. மாநிலக் கல்லூரியில்தான் தெ. பொ. மீனாட்சிசுந்தரம் பதவி வகிக்கிறார். பல ஆண்டுகளாக அறிஞர் அண்ணா அவர்களை அழைப்பதற்கு முட்டுக்கட்டை போட்டு வந்தவர் இவரே என்பது, தமிழ்ப் பேரவை வெளியிட்டுள்ள துண்டு அறிக்கைமூலம் தெளிவாகிறது. கடைசியாக மாணவர் தமிழ்ப் பேரவை, மிகுந்த வாக்குகளால் அறிஞர் அண்ணா அவர்களை அழைப்பதென்று முடிவு கட்டி அழைத்தது; அறிஞர் அண்ணா அவர்களும் ஒப்புக் கொண்டார்கள். தோழர் மீனாட்சி சுந்தரமும் அந்தக் கூட்டத்துக்குத் - தலைமை வகிப்பதற்கு இசைந்தார். கூட்டம் சரியாக நாலரை மணிக்கு ஆரம்பிக்கப்படும் என்று அண்ணா அவர்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அண்ணா அவர்கள் முன் கூட்டியே 4-30க்கு இயலாதென்றும் சரியாக ஐந்துக்கெல்லாம் கல்லூரிக்கு வந்துவிடுவதாகவும் பேரவைத் தலைவருக்கு அறிவித்துவிட்டார்கள். அண்ணா அவர்கள் அறிவித்ததை தமிழ்ப் பேரவைத் தலைவர் தெ. பொ. மீ.க்கு அறிவித்துவிட்டு. அண்ணா அவர்களைக் கூட்டி வர திராவிட முன்னேற்றக் கழகத் தலைமை நிலையத்திற்குச் சென்றுவிட்டார். இப்படி எச்சரிக்கையான முன்னறிவிப்பு தெ. பொ. மீ.க்கு தரப்பட்டும்கூட 4-45க்கு மேடை ஏறிய அவர், "அண்ணாத்துரை இன்று வர முடியாததால் கூட்டம் கலைக்கப்பட்டுவிட்டது" என்று அறிவித்தார். சரியாக 4-50 க்கெல்லாம் அறிஞர் அண்ணா அவர்கள் கல்லூரிக்கு வந்துவிட்டார்கள். தமிழ்ப்பேரவைத் தலைவரோடு வந்ததும், கூட்டம் கலைக்கப்பட்டது கேட்டு, அவதியுறாது, ஆத்திரப்படாது, சிரித்த முகத்தோடு திரும்பிவிட்டார்கள். ஆனால் நடந்ததை அறிந்த மாணவர்களின் உதிரம் கொதித்தது. நேரே தெ. பொ. மீ. யிடம் போய் "ஏன் இப்படிச் செய்தீர்கள்?" என்று காரணம் கேட்டார்கள். அதற்கு அவர், "எனது ஐம்பது ஆண்டு வாழ்வில், நான் கவர்னருக்காகக் கூடக் காத்திருந்தது கிடையாது; இவருக்காக என்ன காத்திருப்பது?" என்றாராம். இதே தோழர் மீனாட்சிசுந்தரம், தோழர் ம. பொ. சி யின் வருகைக்காக கல்லூரிக் கூட்டத்தை ஒருமணி நேரம் தாமதிக்க வைத்ததாக, தமிழ்ப்பேரவையின் துண்டு அறிக்கை கூறுகிறது.

படித்தவர்கள், பண்புடையவர்கள், பகுத்தறிவுள்ளவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். இத்தகு இழிதன்மைக்கு எந்தப் புலவராவது இதுவரை இறங்கி இருக்கிறாரா என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். படித்திருந்தும் பண்பற்ற தோழர் மீனாட்சிசுந்தரம், டாக்டர் வரதராசனாரைப் போலவோ, ராசமாணிக்கனாரைப்போலவோ, அப்பாதுரையாரைப் போலவோ பொதுமக்களிடையில் செல்வாக்குப் பெற்றவருமல்லர். "கவர்னருக்காகக்கூடக் காத்திருந்ததில்லை" என்ற திமிர்பிடித்த வார்த்தை, படிப்பினால் வருவதன்று; பண்பற்ற போலிப் புலமையால் வருவது. கவர்னர்களுக்காக இவரென்ன, பொது மக்களே காத்திருப்பதில்லை. காத்திருந்தாலும் கவர்னர்களின் பேச்சை வெகுநேரம் கேட்டுக் கொண்டிருப்பதில்லை. கேட்டுக் கொண்டிருந்தாலும் என்ன பேசுகிறார்கள் என்பது புரிவதுமில்லை. ஆனால தோழர் மீனாட்சிசுந்தரத்தைக் காட்டிலும் பேரறிவுடைத்த பொதுமக்கள் லட்சோபலட்சமாக அறிஞர் அண்ணா அவர்களின் வாய்மொழியை எதிர்பார்த்து காத்துக் கிடப்பதைக் காண்கிறோம். அண்ணாத்துரையோடு ஒப்பிட்டு கவர்னரை உயர்ந்தவராகக் காட்டியது, தோழர் மீனாட்சிசுந்தரத்தின் போலிப் புலமையையே தெளிவுபடுத்துகிறது. கவர்னர் பதவி என்பது காங்கிரசிலிருக்கும் கழுதையும் பெறக்கூடிய பதவி! மக்கள் மன்றத்தில் அண்ணாத்துரை பெற்றிருக்கும் இடம் தேர்ந்து தெளிந்த அறிவுடையோர் மட்டுமே பெறக்கூடிய இடம்.

காக்கை பிணத்தைத்தான் விரும்பும்; கனியை விரும்பாது கல்வியில்லாத மூர்க்கர்கள் மூர்க்கர்களைத்தான் விரும்புவர்; கற்றோரை விரும்பமாட்டார்கள்.- இது முதுமொழி. இதற்கொப்பவோ என்னவோ, தெ. பொ. மீ. என்னும் காக்கை சிவஞானம் என்னும் பிணத்தை விரும்பி ஒரு மணிநேரம் காத்துக் கொண்டிருந்திருக்கிறது; அண்ணாத்துரை என்னும் கனிக்காகஐந்து நிமிடங்கள் காத்துக்கொண்டிருக்க மனமில்லை. ஆனால், "சாதிமதங்களைக் கடந்து எல்லா மாணவர்களும் அண்ணா பேச்சைக் கேட்க முடியாமல் போனதற்காக வருந்தினார்கள்; கொதித்தார்கள்; கொந்தளித்தார்கள். தமிழ்ப்பேரவைத் தலைவரும் மற்றையோரும் பேரவையிலுள்ள தங்கள் பதவிகளைத் துறந்தார்கள்" என்பதைத் துண்டறிக்கையில் படிக்கும்போது, மெய் சிலிர்க்கிறது. மகுடிக்குக் கட்டுப்படும் அரவினம்போல், அண்ணா அவர்களின் கருத்துக் கோர்வையில் கட்டுண்டு கிடக்கும் மாணவச் செல்வங்களை தெ. பொ. மீ. என்ன, யாருமே மாற்றிவிட முடியாது.

தோழர் மீனாட்சிசுந்தரம் பட்டங்கள் பெறுவதற்காக பதவி வகிப்போரின் கால்களைத் தொட்டுத் தொட்டு வணங்குபவர் என்பதை நாடறியும். நன்கு படித்த புலவர்களுக்கேற்ற கம்பீரமோ, நாகரிகமோ, தெளிவோ, திராணியோ சிறிதுகூட இல்லாதவர். பட்டதைப் பட்டாங்கு விரித்து வைக்கும் முறையில் புலவர் பரம்பரை முன்னேறி வருகிறது. ஆட்சியாளரின் கோபத்தைத் துச்சமாகக் கருதக்கூடிய அளவுக்கு அது வளர்ந்திருக்கிறது. கழகத்தின் பிரச்சாரத்தால் புலவர்களின் தாய்மொழிப் பற்று அளவுகடந்து வலுப்பெற்றிருக்கிறது. அந்தப் பரம்பரைக்கு தோழர் மீனாட்சிசுந்தரம் ஒரு புல்லுருவிபோல் வாய்த்தவர். வடமொழிக்குத் தமிழைக் காட்டிக்கொடுக்கும் கயமைக் குணத்துக்கு வையாபுரிப்பிள்ளை தலைவரென்றால், இவர் செயலாளர்.

படித்து, பட்டம்பெற்று பல மொழிகளில் தேர்ச்சிபெற்று, கிடைத்து வந்த பெரும் ஊதியத்தையும் விட்டு விட்டு வறுமையில் வாடியபடியே தாயகத்துக்கும் மொழிக்கும் இடையறாது பணி புரிந்து வரும் நமது பன்மொழிப் புலவர் எங்கே, விட்டெறியும் பட்டத்துக்காக வீடு வீடாக ஏறி இறங்கும் இவர் எங்கே! தெம்பும், திராணியும், சீரும், சிறப்பும் பெற்று முன்னேறி வரும் மாணவர் சமுதாயம் தமிழ் நிலத்திலிருந்து மீனாட்சிசுந்தரம் போன்ற களைகளைப் பிடுங்கி எறியும் காலம் வெகு தூரத்திலில்லை.

வாழிய புலமை!
வீழிய கயமை!

வெண்பாப் போட்டி-8.

"காய்" என்று எடுத்து "பழம்" என்று முடிக்கவும்.

அமைப்பு இப்படி :

காய்... —— —— ——
—— —— —— ——
—— —— —— ——
—— —— பழம்.

['காய்' என்பது, காய்ந்து, காய்த்து என்பதுபோலவும் வரலாம்.]

முடிவு தேதி 14-12-57.

தென்றல் வெண்பாப் போட்டி : : சென்னை - 6.

★ சாத்தனார் சித்திரம்! ★

நாவீறு பெற்ற நல்லிசைப் புலவர் சாத்தனார் யாத்த நூலே மாவண் தமிழ்த்திறம் மணிமேகலையாகும். மணிமேகலை ஒரு காவியக் கோயிலாகும். இக்காவியக் கோயிலுக்கும் நாட்டிலே நாம் காணும் கற்கோயிலுக்கும் வேறுபாடுகள் பல உண்டு. சேற்றுக்கும் நறு மணங் கமழும் சந்தனத்திற்கும் எவ்வளவு வேற்றுமையுண்டோ அவ்வளவு வேற்றுமை கற்கோயிலுக்கும், காவியக் கோயிலுக்கும். காவியக் கோயிலெல்லாம் நம் அக இருளையும், புற இருளையும் ஓட்டி, நம்மை ஒரு புத்துலகுக்கு அழைத்துச் செல்லும் வழிகாட்டிகளாகும்; கற்கோயிலெல்லாம் நம்மை அறியாமை நிறைந்த ஆரிருள் நிறைந்த உலகுக்கு அழைத்துச் செல்லும் தவறுடைய வழிகாட்டிகளாகும். காவியக் கோயில் உலகம் உள்ளளவும் நிலைத்து நிற்கும் ஆற்றலும், வலிமையும் உடையது; கற்கோயில் கால வெள்ளத்தில் மூழ்கி சின்னாளிலேயே அழிந்து போகக்கூடியது. உண்மையான வாழ்வியலைப் படம் பிடித்துக் காட்டும் கவிஞனுடைய படைப்புக்கும், உண்மைக்கு மாறான, கருத்துக்கொவ்வாத கடவுட் கொள்கையினையும், மதக் கொள்கையினையும் படம் பிடித்துக் காட்டும் கவிஞனுக்கும் இடையே உள்ள வேறுபாடும் மேலே விளக்கிய காவியக் கோயிலுக்கும் கற்கோயிலுக்கும் இடையே உள்ள வேறுபாடும் ஒன்றேயாகும். அந்த வகையில் உண்மையைப் பாடிய சாத்தனார் காட்டும் நெறியாதென அறிய விழைவோம்.

முப்பது காதைகளைத் தன்னகத்தே கொண்ட ஒரு நற்றமிழ் ஏடு மணிமேகலை. இளங்கோவேந்தன் அருளிக் கேட்க வளங்கெழுகூல வாணிகன் சாத்தனார் இந்நூலை யாத்தார் என்பதை,

> "இளங்கோ வேந்தன்
> அருளிக் கேட்ப
> வளங்கெழு கூல
> வாணிகன் சாத்தன்
> மாவண் தமிழ்த்திறம்
> மணிமே கலைதுறவு
> ஆறைம் பாட்டினுள்
> அறிவைத் தனனென் "

என்ற அடிகளால் அறியலாம். இவ்வடிகளிலிருந்து இளங்கோவுக்கும் சாத்தனாருக்கும் இடையேயிருந்த நட்பின் ஆழத்தை அளந்தறிய முடிகிறது. இருவரும் இருவேறு கோணங்களில் வாழ்ந்தவர்கள். இளங்கோ துறவறம் பூண்டவர், சாத்தனார் இல்லறம் பூண்டவர்; இளங்கோ வேந்தன், சாத்தனார் வாணிகன். இருப்பினும் இருவரும் நண்பர்கள். கருத்து வேற்றுமைக்கு மதிப்பளித்த காலம் அவர்கள் வாழ்ந்த காலம் என்பதை இது ஒன்றே சான்று காட்டும்.

இளங்கோவும் சாத்தனாரும் தமிழுக்கு ஆக்கந் தந்தவர்களே. இருப்பினும் தமிழக மக்களிடையே இளங்கோ இயற்றிய சிலம்பு, செல்வாக்குப் பெற்ற அளவிற்கு சாத்தனார் இயற்றிய மணிமேகலை பெறவில்லை. காரணம் யாதோ? சிலம்பில் எந்த அளவிற்கு சங்காலச் சான்றோர்களின் அடிச்சுவட்டைக் காணமுடிகிறதோ அந்த அளவிற்கு மேகலையிலும் காணமுடிகிறது; சிலம்பில் எந்த அளவிற்கு தமிழர் தம் அடிப்படைக் கொள்கைகளைக் காணமுடிகிறதோ அந்த அளவிற்கு மணிமேகலையிலும் காணமுடிகிறது. இருந்தபோதிலும் மணிமேகலை மக்களிடையே பரவவில்லை! மணிமேகலை ஒரு புத்தமத நூல் என்ற பெயரைச் சரியாகவோ தவருகவோ பெற்றுவிட்டது. இஃது வருந்தத்தக்க செயலேயாகும். மணிமேகலையை வெறுத்தொதுக்குவது சாத்தனாரை—அவர்தம் கருத்துக்களை வெறுத்தொதுக்குவதேயாகும். சாத்தனார் அப்படி என்ன கருத்தைத்தான் கூறிவிட்டார்? தமிழர் தம் அடிப்படைக் கொள்கையைத் தானே சாத்தனார் கூறியுள்ளார்! ஆராயுமிடத்து அவர் புத்தமத கருத்துக்களை வலியுறுத்துவதற்காக நூல் எழுதவில்லை. அக்காலத் தமிழக நிலையை படம்பிடித்துக் காட்டவே நூல் யாத்துள்ளார். அதோடு ஆடலரசியாம் மாதவிக்கும் பாடலரசனும் கோவலனுக்கும் நன்றி செலுத்தவேண்டும் என்ற காரணத்திற்காகவுமே மணிமேகலையை யாத்தார் எனத் தெரிகிறது. அப்பெருமகன் உலகமக்கள் நல்வழியில் வாழ என்னென்ன நெறிகளைக் காட்டியுள்ளார் என்பதை சில எடுத்துக்காட்டுக்களுடன் காண்போம்.

இவ்வையகம் வாழ வளமான கருத்துக்களைத் தந்தவர் வள்ளுவப் பெருந்தகையார். 'அறம்' என்ற சொல்லுக்குப் பலர் பலவிதமாகப் பொருள் கண்டார்கள். ஆனால் வள்ளுவர் கண்ட பொருள் உலகில் வேறு யாரும் காணாத பொருளாகும்.

> " மனத்துக்கண் மாசில
> னாதல் அனைத்தறன்
> ஆகுல நீர பிற "

—என்பது அவர் கண்ட பொருளாகும். சாகாத் தமிழ் பாடிய சாத்தனார் கண்ட பொருள் வேறு வகையானது. வள்ளுவர் கண்ட அறத்திற்கு ஒரு விளக்கந்தருவதுபோலக் கூறியுள்ளார்.

> " அறமெனப் படுவது
> யாதெனக் கேட்பின்
> மறவாது இதுகேள்;
> மன்னுயிர்க் கெல்லாம்
> உண்டியும் உடையும்
> உறையுளும் அல்லது
> கண்ட தில் "

என்று விளக்கியுள்ளார்.

> " உண்டி கொடுத்தோர்
> உயிர் கொடுத்தோர் "

என்ற அடிப்படைக் கொள்கையின் மீதே மணிமேகலை என்னும் கலைக் கோயிலைச் சாத்தனார்கட்டியுள்ளார். அதற்காகவேதான் 'அமுத சுரபி'' யைப் படைத்தார்; ஆபுத்திரனைப் படைத்தார்; மணிமேகலையை காஞ்சியின் தெருக்களிலே நடமாடவிட்டார்.

அறத்திற்கு விளக்கங் கண்ட சாத்தனார் அத்துடன் நில்லாது அறமே ஒருவனது வாழ்க்கைக்கு விழுத்துணையாகும் என்று பிறிதோரிடத்திலே கூறியுள்ளார்,

> " இளமையும் நில்லா;
> யாக்கையும் நில்லா;
> வளவிய வான்பெருஞ்
> செல்வமும் நில்லா;
> புத்தேள் உலகம்
> புதல்வரும் தாரார்;
> மிக்க அறமே
> விழுத்துணை ஆவது "

இக்கருத்து இன்றைக்கு மட்டும் வேண்டிய கருத்தல்ல; உலகம் உள்ளளவும் வேண்டிய அடிப்படைக் கருத்தாகும். சங்கச் சான்றோர்களின் கொள்கை இதிலே மிளிர்வதை காணமுடிகிறது.

மணிமேகலையின்பால் நீங்காக் காதல் கொண்டவன் உதயகுமரன். அக்காதல் இறுதியில் அவனது உயிருக்கே உலை வைத்துவிட்டது நாடாளும் சோழனுக்கு தன் மகனின் சோக முடிவு அறிவிக்கப் பட்டது. அச்செய்தி கேட்டு அழுதானில்லை, புரண்டானில்லை. கண்ணீர்விட்டானில்லை. மாறாக தன் மகன் தீநெறியிற் சென்று இறந்து பட்டமைக் குறித்து வருந்தினான். "இவன் தந்தை என்னோற்றான் கொல்" என்ற புகழ் மொழியைக் காதால் கேட்கமுடியாமற் இழுக்கைத் தந்துவிட்டானே என்று எண்ணியெண்ணி கலங்கினான். உதயகுமரன் தீநெறியிற் சென்று இறந்தான் என்ற செய்தி மற்ற நாட்டிற்குப் பரவு முன்னர் அவனை இடுகாட்டிற்கு இழுத்துச் செல்லுங்கள் என்று ஆணையிட்டான். மற்றவர்கள் கேட்டால் தன்னை இகழ்வார்களே, தன் சோழவள நாட்டை இகழ்வார்களே என்று கருதியே அப்படிச் செய்ய ஆணையிட்டான்.

அவனது உள்ள உரம் என்னே! மன்பதை காக்குந் தென்புலங் காவல் தன்னால் பிழைத்ததற்காக, அச்செயல் பிறமன்னர்களின் காதுகளிலே விழுமுன்னரே இறந்து பட்டான் அரியணையிலிருந்த பாண்டியன் நெடுஞ்செழியன். அதைப் போலல்லவா சோழமன்னன் நடந்து கொண்டான். அவனது செயலை எண்ணும்போது நம் உள்ளம் வியப்பென்னும் ஆழியில் மூழ்கிவிடுகிறது. இவ்விருபதாம் நூற்றாண்டில் வாழும் தந்தையர்கள் ஒவ்வொருவரும் அறிந்துகொள்ள வேண்டிய நிகழ்ச்சியல்லவா இது!

தான் பெற்ற செல்வமகன் உதயகுமரன் இறந்த செயல் எண்ணி வருந்தினாள் அரசி. அவன் இறப்பதற்குக் காரணமாயிருந்த மணிமேகலையை வஞ்சந்தீர்க்க எண்ணினாள். ஒரு கயவனை அனுப்பி அவளது கற்பைச் சூறையாடச் செய்தாள்; அவளை சிறைக்கோட்டத்தில் அடைத்து உணவளிக்காது துன்புறுத்தினாள். அவளைப் பைத்தியக்காரியாக்க மருந்திட்டாள். இத்துணை துன்பங்களையும் நெஞ்சில் இரக்கமின்றி நேர்மைக்குணமின்றி வஞ்சிக்கொடியாம் மணிமேகலைக்குக் கொடுத்தாள். இவ்வளவையும் பொறுத்துக்கொண்டு குணமென்னும் குன்றேறி நின்றாள் மணிமேகலை. அவளைக் கண்டு அரசி அஞ்சினாள்; தான் செய்தவற்றையெல்லாம் மன்னிக்கும்படி வேண்டிக் கொண்டாள். மணிமேகலை அரசியைப் பழிக்குப்பழி வாங்க விரும்பவில்லை. பல இடுக்கண்களை அவள் அடுக்கச் செய்தது கண்டும் மேகலையின் மனம் மாறவில்லை.

> "இன்னா செய்தார்க்கும்
> இனியவே செய்யாக்கால்
> என்ன பயத்ததோ சால்பு."

என்ற எண்ணத்தை உள்ளத்தே கொண்டு அரசிக்கு இனிய பல கருத்துச் செல்வம் வழங்குகிறாள். **"அரசியே! உலகில் மக்களுக்குத் துன்பந்தருவன காமம், கொலை, களவு, கள், பொய் ஆகியவையே. இவற்றை அடியோடு அகற்றல் வேண்டும். இவற்றை நீக்காவிடின் கற்ற கல்வியால் பயனில்லை. தன்னை நாடி வாடி வருபவர்களின் பசிப் பிணியை நீக்கவேண்டும். எல்லா உயிர்களிடத்தும் செந்தண்மை பூண்டொழுக வேண்டும்"** என்ற பல கருத்துக்களைக் கூறி அரசியின் உள்ளக்கறையைப் போக்குகிறாள். இக்காட்சியைக் கண்ட பின்னும் மக்கள் திருந்தி வாழட்டும் என்ற நல்லெண்ணத்தின் விளைவாலேயே சாத்தனார் இந்நிகழ்ச்சியைப் படம் பிடித்துக் காட்டியுள்ளார். சாதிச் சண்டையால் வெட்டுண்டும் குத்துண்டும் இறக்கும் மக்களினத்தார் சாத்தனார் காட்டும் இந்நன்னெறியைப் படித்துப் பார்க்கவேண்டும்.

எனவே இறுதியாக சாத்தனார் காட்டும் நெறி அனைத்தும் கோட்டமில் நெறியே! குவலயத்தார் அனைவரும் கடைப்பிடிக்க வேண்டிய நெறிகளாகும். அவைகள் அனைத்தும் நம்மைத் தீதொரீஇ நன்றின்பால் உய்க்கும் ஆற்றலுடையவை.

— அறவாணன்.

பொன்னம்பலனார் தாயகம் திரும்பினார்

கடந்த ஆறு மாதங்களாக, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சமுதாயக் கருத்துக்களையும், கழகம் ஆற்றிவரும் அரும்பெரும் தொண்டினையும் மலேயாவாழ் தமிழ் மக்களிடையே விளக்கியும், கழக சமுதாயக் கருத்துக்களை மலேயாவாழ் திராவிடப் பெருங்குடி மக்கள் பின்பற்ற வேண்டிய அவசியத்தை வலியுறுத்தியும் பிரச்சாரப் பணியாற்றிவந்த தோழர் அ. பொன்னம்பலனார் அவர்கள் நவம்பர் 20-ம் நாள் காலை தாயகம் வந்தடைந்தார்.

இத்திங்கள் 12-ம் நாள் மலேயாவிலிருந்து புறப்பட்ட 'ஸ்டேட் ஆப் மதராஸ்' என்ற கப்பலில் தலைநகர் வந்து சேர்ந்த தோழர் அ. பொன்னம்பலனார் அவர்களுக்கு, அண்ணா அவர்களும், பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும், மற்றும் தோழர்கள் ஏ. கோவிந்தசாமி எம் எல். ஏ., கே. ஏ. மதியழகன், இரா. செழியன், டபிள்யூ. கே. தேவராசன் ஆகியோரும் மலர்மாலை சூடி வரவேற்றனர்.

8. 'காய்' எனத் தொடங்கி 'பழம்' என முடித்தல்

காய்வெய்யில் நேரத்தில் கன்னியவள் என்வாயில்
சேய்மிட்டாய் என்றுரைத்துச் சேர்த்தாள்;நான்-வாய்மென்றேன்
'தூத்தூ' வெனத்துப்பித் துள்ளிக் குதித்தெழுந்து
பார்த்தேன்; மிளகாய்ப் பழம்.

—சிந்தாமணி, கருப்பட்டிபாளையம்.

காய்நிலவுக் கீடாமோ கண்சிமிட்டுத் தாரகைகள்!
தாய்த்தமிழுக் கிந்திமொழி சாண்பெறுமோ?—ஆய்புலனிற்,
சீலமிகு செந்தமிழும் செல்வத் திருக்குறளும்
பாலிற் கலந்த பழம்!

—டி. வி. பச்சையப்பன், மதுரை.

காய்கவர்த லுண்டோகாண் கையில் கனியிருப்ப,
தாய்மொழிதான் நீயிருக்கத் தாரணியில்—மாய்மொழிகள்
வந்தீங்கு வாழவழி செய்வோமோ? வையமிதில்
பைந்தமிழே! நீயே பழம்!

—செந்தமிழரசன், பண்ணைக்காடு.

காய்ந்த மிளகாய் கடுங்கூழ் இவைதவிர
வாய்க்குத் தனிஉணவு வேறில்லை—ஆயினுந்தன்
பாவங் கழியுமென்று பக்தியுடன் போய்த்தருவாள்
கோவிலிலே தேங்காய் பழம்.

—குகன்குருசாமி, சுமுதி.

காயென்று நின்னைக் கருதும் நிலைமாறித்
தாயென்ற எண்ணம் தலைக்கேறச்—சேயெல்லாம்
வேற்று மொழிப்பற்று விட்டார் மொழிமரத்தில்
போற்றும் தமிழே பழம்.

—சொ. அடைக்கலம், திருக்கோகர்ணம்.

காய்ந்த சருகாய் கவினிழந்து வாழுகின்ற
தேய்ந்த திராவிடத்தின் நன்மக்காள்!-பாய்ந்தேகாம்
இன்றுமுதல் போராடி இன்பமுடன் தான்பெறுவோம்
தென்னகமாம் இன்பப் பழம்!

—எஸ். கே. சிங்காரவேலு, கடம்பரவாழ்க்கை.

காய்மைப் பருவத்தாள் கன்னி, கனியென்று
பேய்மை யுளத்தால் தொடலானீர்-தாயானேன்
அன்று மதியிழந்தேன்; நன்றுநன்று மெய்யாய்கான்
இன்றுபக்த எட்டிப் பழம்.

—மு. சா. சோ, செக்கானூரணி.

காய்ந்த வயிறேடு காண்கின்ற பாட்டாளி
தேய்ந்தோடிப் போமட்டும் தேன்பிழிந்(து),-ஓய்ந்தபின்
காலால் மிதித்துதறும் கல்நெஞ்சர் தின்கின்றார்
பாலோடு தேன்மாம் பழம்.

—சிவ. இளம்பரிதி, சுரந்தை.

காய்ந்து மிகவாடிக் கண்ணீர் வடித்தேங்கித்
தேய்ந்து மடிவதெலாம் தேமொழியே-ஆய்ந்தறியும்
திண்மையற்ற தாலேயாம்; திண்மையுண்டேல் வாழ்வினிமேல்
பண்பில் உயர்ந்த பழம்.

—ந. ஜாபர், சித்தயங்கோட்டை.

காய்வேண்டாம் நற்கனிதான் வாங்கிவா என்றுரைத்தாய்
வாய்ச்சொல்நான் தப்பாமல் வாங்கிவந்தேன்;-காய்என்றே
யார்சொல்லி உன்வதனம் இவ்வண்ணம் ஆயிற்றே
பார்பார்! இதோபார் பழம்!

—சுப. சேரலாதன், சுரந்தை.

காய்ந்தாலும் அச்சொல் கரும்பேஎன் உள்ளத்தே
பாய்ந்தோடு மின்பம் பெருக்கிடுமே-ஆய்ந்திடிலோ
ஓதுசொற் பாகாம், உடற்கட்டி, நின்னதரம்
கோதாத கொவ்வைப் பழம்.

—ந. பொன்னரசு, வலங்கை.

காய்என்றேன்; 'அத்தான்! கனிந்திருக்கு' மென்றுரைத்தாள்;
நீயென்றேன்; என்ன நினைத்தாளோ?-வாய்திறந்து;
சுருக்கென்று சொன்னாள்: கசப்பெனினும், காக்கை
விருப்புவதே வேப்பம் பழம்.

—"முத்தூரான்", பொள்ளாச்சி.

காய்வயிறும் பஞ்சடைந்த கண்களுந்தான் ஏழையரின்
வேய்குறிகள் என்றே விதியிருக்க-ஆயிழையே
பாரினிலே காசுடையோர் பல்சுவையால் உண்டதன்பின்
சீரணிக்கத் தின்பர் பழம்.

—த. ப. இரத்தினம், முதுகுளத்தூர்.

காய்ந்தவர் காணார்; கழகக் கருவூலம்
ஆய்ந்தவர் அன்றோ அறிகுவர்?-ஓய்ந்தெமது
நூலில் நுழைந்து நுகருவீர்; நூலல்ல,
பாலிற் பிழிந்த பழம்!

—மா. சுப்பையா, நாரைக்கிணறு.

காய்த்துக் கனிந்த கனியெல்லாம் நன்றாமோ?
ஆய்ந்த அறிவுடைய ஔவைக்கு-வாய்ந்தநல்
பல்புகழும் பெற்றுலும் பண்புடையான் அஞ்சியிட்ட
நெல்லிப் பழமே பழம்.

—வீர. மதிவாணன், பருத்திச்சேரி.

காய்க்கும் மாமரத்தில் கல்லெறியும் காளையர்கள்
வாய்க்கு ருசியாய் வடுவெல்லாம்-ஆய்ந்தெடுத்து
மோரிலே ஊறவைக்க எண்ணினு ராமாகில்
பாரில் அரிது பழம்.

—நீ. து. சுந்தரபாண்டியன், ஒத்தக்கடை.

காய்ந்த மலரானேன்; காரிழந்த வானானேன்
தேய்ந்த நிலவாய்த் திருவிழந்தேன்-பூந்தொடியே
ஆவி துறந்தார்; அலைகடல்சூழ் பூவுலகு
பாவையெனக் கெட்டிப் பழம்.

—ந. அலி, துறையூர்.

காய்முற்றி மாறும் கனிச்சுவையும் நில்லாதே
தாய்காட்டும் உள்ளன்பு தன்முன்னே-காய்பரிதி
தன்னொளியால் வாழ்கின்ற தாரணியில் அன்பொன்றே
பன்னாள் சுவைக்கும் பழம்.

—மு. கு. வேலவன், கரூர்.

காய்பறித்துக் கம்பால் கனியாக்கித் தந்தாலும்
காய்கனி யாமோ கனியமுதே-சேய்களுக்குத்
தாய்த்தமிழ்த் தேனிருக்க நோய்தரும் இந்திதான்
பேய்தந்த நச்சுப் பழம்.

—ச. தங்கமணி, எழுகடல்

காய்ந்த வயிற்றேடும் காணுப் பசியோடும்
சாய்ந்தேன் மரத்தருகில்; சற்றேகான்-ஓய்வுபெற
காற்றைப் பகைத்திட்டுக் கண்ணெதிரே வீழ்ந்ததடா
சோற்றைப் பழிக்கும் பழம்.

—புவியரசன், காரைக்குப்

காய்கின்ற செங்கதிரோன் கண்மறையும் போதுலகம்
தோய்கின்ற பேரெழிலைச் சொல்வதெங்ஙன்?—ஓய்கின்ற
விண்ணிற் பலமாயம் விந்தையுறச் செய்தின்பம்
பண்ணும் நெருப்புப் பழம்.

—ச. இராமசாமி, கயற்கண்ணிபுரம்

காய்போன்ற இந்திதனைக் கட்டாய மாயாக்கி
மாய்த்திடவே எண்ணுகிறார் மாத்தமிழை-வேய்தொடியே
நல்லதல்ல தீபோலும் நச்சுமொழி; நந்தமிழே
பல்சுவையும் சேர்ந்த பழம்.

—"காசிராசன்", திருப்பனந்தாள்

ஆசிரியர்: கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர்: சுப. அருணாசலம், ஏ.எல்.எஸ். அச்சகம், 2/127, மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நா